பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 | 14 ஜூலை 2018 | விதி : 109



## கண்ணீரில் கரைந்த 500 நாட்கள்



## பொலிஸாருக்கு மட்டுமல்ல பொறுப்பு நமக்கும்தான்



## கைபேசிகள் மழைக்காடுகளின் காவலன்




## மீசாலை

# பலியெடுக்கும் நுண்கடன்




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








'பாகுபலி' படத்தின் இரு பாகங்களும் இமாலய வெற்றி பெற்றன. இந்நிலையில் அதன் மூன்றாம் பாகம் தயாராகிறது. ஆனால் இதில் பிரபாஸ், அனுஷ்கா ஆகியோர் நடிக்கவில்லை.

காரணம் இதன் கதை பாகுபலியின் முன்கதையாக உருவாகிறது. அதாவது சிவகாம தேவியை முன்னிலைப்படுத்தும் கதையாகப் படம் எடுக்கப்படுகின்றது. இந்தப் படம் 3 பகுதிகளாக எடுக்கப்படுகின்றது. ராஜமவுலியுடன் தேவா கவுடாவும் இணைந்து இப்படத்தை இயக்கவுள்ளார்.

ஜே.வி.பி. தலைவர் ரோ
வாழ்க்கை வரலாற்றை மை
எடுக்கப்பட்ட படம் 'தி பு
சிங்கள முன்னணி நடிக
ஆராச்சி நடித்த இந்தப் பட
தெரிவாகியுள்ளது. 2019 ஒ
இந்தப் படம் பரிந்துரைக்

விஜயின் 'சர்கார்' படத்தின் முதல்பார்வையில் விஜய் புகைபிடிப்பது போன்ற காட்சி இடம்பெற்றது. இதற்கெதிராகப் பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், படத்துக்கெதிராக பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக விளக்கம் கேட்டு சென்னை உயர்நீதிமன்றம் விஜய், முருகதாஸூக்கு ஆணை பிறப்பித்துள்ளது.



சமந்தா ந
திருமணம்
செய்தி. ஆ
ரசிகர் ஒருவ
அவருக்கு ஐ
கூறியிருக்கி
சமந்தாவி
பக்கத்தில் '
ஆயிரம் மு
மேல் உங்க
பதிவிட்டுள்
ஒருமுறை கூ
அளித்ததில்
உங்கள் மே
இதுவரைக்
வீதம்கூட கு
ஐ லவ் யூ' எ
பதிவிட்டுள்
அவரது
என்று மட்
பதிவிட்டுள்



ராம்லீலா படத்தின் பாட
தான் நடனமாடும் வீடியோ
சமூகவலைத்தளத்தில் பதிவி
ஊர்வசி ரவுடெல்லா. இதை
ரசிகர்கள் வைரலாக்கி வருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 14 ஜூலை 2018 | விதி : 109

# நான் முதலமைச்சரானால் வடக்கில் பாலும் தேனும் ஓடும்



முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா ஊடகவியலாளர் சந்திப்பில் தான் வட மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதாகவும் தான் முதலமைச்சராக வந்தால் வடக்கில் பாலும் தேனும் ஓட வைக்கப் போவதாகவும் தெரிவித்தார். பின்பு நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதும் இதே கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அது தொடர்பாக அவரின் முன்னாள் தோழர் ஒருவரிடம் ஊடகவியலாளர்கள் அவர் முதலமைச்சரை விடக்கூடிய அதிகாரம் கொண்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தபோது ஏன் தேனும் பாலும் ஓட விடவில்லை எனக் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர், அவர் அமைச்சராக இருந்த காலத்தில் வீடுகளிலும் வீட்டு முற்றங்களிலும் பல தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டுக் காணாமல் போயினர். சுடப்பட்டவர்கள் சிதறிய இரத்தமும், கடத்தப்பட்டவர்களின் அவலக்குரலும் தேனை விட இனிமையாயிருந்தன. அதேபோல் கொலைகள், கொள்ளைகள், கிறீஸ்பூதம் போன்றவை பலருக்கும் பால் அருந்தியமை போன்ற தென்பைக் கொடுத்தன. அவ்வகையில் அப்போது தேனும் பாலும் ஓடியமை உண்மை.

பாலுக்கும் தேனுக்கும் வேறு அர்த்தம் சொல்லப்படுகிறதே என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது அவர் சொற்களை அர்த்தப்படுத்துவது தனி மனித சுதந்திரமாகும். அதில் எவரும் தலையிட முடியாதெனக் கூறினார்.

இவை பற்றி நீங்கள் கேள்வி எழுப்பவில்லையே என அவரிடம் இவை பற்றி நீங்கள் கேள்வி எழுப்பவில்லையே என அவரிடம் கேட்கப்பட்டபோது அவர் நான் அப்படிக் கேள்வி எழுப்பினால் இன்னொரு தோழர் தனது அதிகாரத்தையும் பணத்தையும் பாவித்து எனது மனைவியைத் தன் வசப்படுத்தி பின் இருவரும் சேர்ந்து என்னைக் கொன்றிருப்பார்கள் எனப் பரிதாபமாகப் பதிலளித்தார்.

ஊடவியலாளர் நிமலராஜனுக்கு நடந்தது நினைவுக்கு வரவே ஊடகவியலாளர்களும் அத்துடன் பேட்டியை நிறைவு செய்து விட்டனர்.

> நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி
> வஞ்சனை சொல்வாரடி - கிளியே
> வாய்ச் சொல்லில் வீரரடி

## காவல்துறை அதிகாரியை கொலை செய்த பிக்கு

இரத்தினபுரி பொலிஸ் பிரிவிலுள்ள விகாரை ஒன்றில் பௌத்த பிக்கு ஒருவரால் காவல்துறை அதிகாரி ஒருவரின் கழுத்தைக் நெரித்துக் கொலை செய்துள்ளார்.

ஏற்கனவே நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அந்தப் பிக்குவைத் தேடிச் சென்ற காவல்துறை அதிகாரியே கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டவராவார்.

பொலிஸார் அவரைப் பிக்குவிடமிருந்து விடுவித்து மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர் வழியில் உயிரிழந்தார். பிக்குவைக் கைது செய்யச் சென்ற பொலிஸார் மீது அவர் கைக்குண்டை வீசியபோதும் எவரும் பாதிக்கப்படவில்லை.

தற்சமயம் பௌத்த தேரர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்.



> ஓதுறது தேவாரம்
> இடிக்கிறது சிவன் கோயில்

## 10,000 கண்ணீர்ப் புகைக்குண்டுகள்

இலங்கையின் கலகமடக்கும் பொலிஸாருக்கு பயன்படுத்துவதற்கென 10,000 கண்ணீர் புகைக் குண்டுகளைக் கொள்முதல் செய்ய விலைமனுக் கோரப்பட்டுள்ளது.



எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் புதிய புதிய வரிகள் மூலம் அதிகரிக்கப்படுகின்றன. இரவோடிரவாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகரிக்கப்படுவதாலும் பணத்தின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைவதாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது.

இதன் காரணமாக தபால், ரயில்வே திணைக்களங்கள், அரச மருத்துவர்களின் அமைப்புகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. கல்வியைத் தனியார் மயமாக்கலுக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களும் தொடர்கின்றன. சர்வதேச நாணய நிதியம் உலகவங்கி என்பன நிபந்தனைகளின் அடிப்படையிலேயே கடன்களை வழங்குகின்றன. அதன்படி சம்பள உயர்வுகளையோ வேறு நிவாரணங்களையோ பணியாளர்களுக்கு வழங்க முடியாது.

எனவே தொழிலாளர்கள், விவசாயிகள், அரச பணியாளர்கள் ஆகியோரின் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், போராட்டங்கள் பெருமளவில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றை அடக்கவே பெருந்தொகையான கண்ணீர் புகைக்குண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தம்மை ஆட்சியிலேற்றியவர்களுக்கு எதிராகப் பாவிக்கவே இக்குண்டுகள் எனத் தெரிய வருகின்றது.

> ஏறிவந்த ஏணியை எட்டி உதைத்தானாம்
> இறங்க வழியின்றி விழுந்து செத்தானாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

தாய் இறக்கும் போது
மொட்டை போட
கற்றுத் தந்த பகுத்தறிவு



அவர் இருக்கும் போது
சோறு போடக்
கற்றுத்தரவில்லை..

பெண் பிள்ளைகள் எவ்வளவு
வளர்ந்தாலும் பெற்றவர் பார்வைக்கு
மட்டுமே குழந்தைகள்




மற்றவர் பார்வைக்கு அப்படி
இல்லை என்பதை உணர்ந்து
ஆடைகளை அணிவியுங்கள்..!

குள்ளநரியின் புத்தியும்
கொஞ்சமாவது வேண்டும்.
குழிபறிக்க அல்ல.
குழியில்
விழாமல் இருக்க.

பணம் இருந்தால் நீங்களா
என ஆச்சர்யமாக
கேட்பதும்...

அதுவே பணம் இல்லாமல்
இருந்தால்,
ஓ நீயா என்று
கேவலமாகவும்
பார்ப்பது தான் உலகம்....!!!

வளர்ந்த பிறகு பென்சிலுக்கு
பதிலாக பேனாவை உபயோகிப்பது
எதற்காக தெரியுமா..?




இனி வரும் காலங்களில் செய்யும்
தவறுகளை திருத்துவதும்
அழிப்பதும் கடினம் என்று
உணர்த்துவதற்காக தான்..!



"நான் முட்டை சாப்புடுவேன்:
மத்தபடி சைவம். நீங்க?"
"நான் கொஞ்சம்
பொறுமையா இருந்து
அது வளந்தப்புறம்
சாப்பிடுவேன்... மத்தபடி
நானும் சைவம்தான்!"

எத்தனை பேர் எச்சில்
பட்டாலும்
தீட்டு என்று ஒதுக்கப்படாத



ஒரே பொருள்
பணம் ஒன்றுதான்!

துரோகிகளிடம் அதிக
"கோபம்" இருக்காது



கோபப்படுகிறவர்களிடம்
"துரோகம்"
நிச்சயமாக இருக்காது

நாரதர் எல்லா வீட்டிற்கும்
போக முடியாது
அதனால் தான் கடவுள்



சொந்தக்காரர்களை
படைத்துள்ளார்..

கோபம் என்றால்
சமைக்காமலே படுத்துக்
கொள்வது மனைவி...




அதுவே சமைத்துவிட்டு தான்
சாப்பிடாமல் படுத்துக்
கொள்வாள் தாய்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## இரத்தம் குடிக்கும் அட்டைகளா நிதி நிறுவனங்கள்?

நுண்கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2016 இல் 97 பேரும், 2017 இல் 116 பேரும் இந்த ஆண்டில் இதுவரை 79 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் எனத் தரவுகள் கூறுகின்றன. எனினும் இந்தத் தரவிலும் எண்ணிக்கை அதிகம் என்றே கூறப்படுகின்றது. பல நாடுகளில் வறுமை ஒழிப்புக்கு வெற்றிகரமாக அமைந்த இந்தத் திட்டம் இலங்கையில் - வடக்கு, கிழக்கில் தோல்வியடைந்தமை குறித்து நாம் அதிகம் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். இதற்கான தார்மீகப் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்.

1,50,000 ரூபாவுக்குக் குறைவான கடன் பெற்றவர்களுக்கு சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனக் கடந்த மாதம் நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருந்தார். இதேபோல முறைகேடாக நடக்கும் நிதி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்களுக்கு எதிராக 50 இலட்சம் ரூபா வரை தண்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். நிதி அமைச்சரின் நாடாளுமன்ற உரைக்குப் பின்னரும்கூட நிதி நிறுவனங்களின் அடாத்தான செயற்பாடுகள் குறைந்ததாகத் தெரியவில்லை. சொல்லப்போனால் இன்னும் அதிகரித்துள்ளது.

அவரின் அறிவிப்புக்குப் பின்னர் மட்டக்களப்பில் இருவரும் யாழ்ப்பாணத்தில் ஒருவருமாக 3 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். வவுனியாவில் கடன் பெற்ற பெண்ணின் கணவரை நிதி நிறுவனங்களின் முகவர்கள் மோசமாகத் தாக்கியதில் படுகாயமடைந்தார். முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் பெண் தலைமைக் குடும்பங்களின் வீடுகளுக்கு மாலை 6 மணிக்குப் பின்னர் கூட போய் பணத்துக்கு நெருக்குதல் கொடுக்கின்றனர் முகவர்கள். இந்த அத்துமீறல் குறித்துப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தாலும், பொலிஸார் முகவர்களுக்கு சார்பாகவே கதைக்கின்றனர் எனவும் - மிரட்டல் விடுக்கின்றனர் எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் கூறுகிறார்கள்.

அதிக வட்டிக்குப் பணம் வசூலிக்கும் இந்த நிறுவனங்கள் மக்கள் குறித்துக் கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை. கடன் கொடுக்கும்போது சரியான நடைமுறைகளைப் பின்பற்றி கடன் கொடுத்தால் இந்தத் தவறுகள் இடம்பெறா. ஆனால் அதிக வருமானத்துக்கும் வேறு உள்நோக்கங்களுக்காகவும் முகவர்களாக செயற்படுவர்கள் பலரையும் - குறிப்பாகப் பெண்களைத் தங்கள் வலையில் வீழ்த்தி கடன்களை அவர்களின் தலையில் சுமத்தி விடுகின்றனனர். ஏற்கனவே யுத்தத்தால் அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக நிற்கும் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளாகச் செயற்படும் முகவர்கள் - நிதிநிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இந்த நடவடிக்கை அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் பொலிஸாருக்கு எதிராகவும் இருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்யுமா இந்த அரசாங்கம்...?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 10

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

முன்னுக்கிருந்த பெட்டிக்கடை போன்ற ஒரு கட்டடத்தில் அமர்ந்தோம். அந்த மனிதர் வந்தார். நான் ஒன்றுமே சொல்லவில்லை. அவராகவே சொன்னார். 'நீங்கள் ஒரு பொருளையும் ஒரு உயிரையும் தேடுகிறீர்கள். பொருள் வீட்டை விட்டுப் போகவில்லை. வீட்டுக்குள்தான் விளையாட்டுத்தனத்தால் பத்து வயதுக்குட்பட்ட சிறுவனால் வீட்டுக்குள் ஒளிச்சு வைச்சிருக்கு. நீங்கள் தேடும் உயிரையும் இருபது நாட்களுக்குள் காண்பீர்கள்' எனக் கூறி திருநீறு தந்தார். வாங்கிக் கொண்டேன்.

வரும் போது ஜெயந்திநகர் சந்தையில் மரக்கறியும் வாங்கிக் கொண்டோம். சந்தைக்கு நூறு மீற்றர் தள்ளியே கிபீரடித்திருந்தது. ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாக இறந்தவரையும் காயப்பட்டவரையும் கூறிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டில் கணவரின் தமக்கையாரின் மூத்த மகளுக்கு ஒரு மகனிருந்தான். அவனிடம் தந்திரமாகக் கதைகேட்டபோது வீடு கட்டுவதற்காக அரிந்து அடுக்கி வைக்கப் பட்டிருந்த கல்லிடுக்குக்குள் வைத்ததாக கூறினான். காப்புக் கிடைத்தது. கடைசி வரையும் காப்பைத் தன்னிடம் தரவில்லை என்ற வாதத்தை அந்தப் பெண் கைவிடவே இல்லை.

'அம்மா ஒலிம்பிக்குமார்ட வீட்டுக்கு கிட்டவா உங்க வீடு' எனக் கேட்டேன்.

'இல்லை... நாங்க மிச்சம் (மிகுதியான) தூரமா இருக்கிறம்' என்றார்.

ஒலிம்பிக் குமார் திருகோணமலையைச் சேர்ந்தவர் என அவள் கூறியிருந்தாள்.

கடைசி வரையும் காப்பு தன்னிடம் தந்தது நினைவில்லை. என கணவரின் அக்கா கூறியது எல்லோருக்கும் வேடிக்கைச் சிரிப்பாய் வெடித்துப் பறந்தது.

பால் மா கரைத்துக் கொடுக்கும் இடத்தில் அரசியல்துறைப் போராளிகள் நின்றிருந்தார்கள். கணனிப் பிரிவில் படித்துக் கொண்டிருந்த இரும்பொறை என்ற சகோதரியைக் கண்டேன். அவளுடன் மனம் விட்டுக் கதைக்க வேண்டும் போலிருந்ததால் கயல்மதியின் அக்காவை பால் பெறுமிடத்தில் காத்திருக்கும்படி கூறிவிட்டு இரும்பொறையிடம் போனேன். அவளுடைய பணி களமுனைச் செய்திகளை ஏதோ ஒரு வகையில் புலம்பெயர் தேசங்களுக்கு அனுப்புவதாகும். விரைந்து சில செயற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பவளை குழப்பாமல் அமைதியாக சில வேலைகளுக்கு உதவிக் கொண்டிருந்தேன்.

'அக்கா...' என்று அழைத்தவளை நிமிர்ந்து பார்த்தேன். 'ஏதோ கேட்க நினைக்கிறீங்க... இப்ப கொஞ்சம் ஓய்வெடுக்க நேரமிருக்கு. கேட்க நினைக்கிறதை கேளுங்க...' என்றாள்.

அட இந்தப் போராளிகள் எப்படித்தான் சனத்தின்ர உள்ளத்தை படம் பிடிக்கிறார்களோ...?

'இல்லடா மக்களுக்காக தொடங்கின போராட்டம். மக்களை சுடுற அளவுக்கு கேவலமாகப் போட்டுதடா. கவலையாவும் வெறுப்பாவும் இருக்கடா. போற சனங்கள் போகட்டுமன். ஏன் அதுகளை சுடுகிறார்கள்...?' என என் கேள்வியை சுருக்கிக் கொண்டேன்.

எந்தவித சலனமும் காட்டாதிருந்த அவள் மெல்லச் சிரித்தாள். 'அக்கா பிள்ளைகள் தவறான வழியில போனால் தண்டிப்பது பெற்றோரின் கடமைதானே. பெற்றோருக்கு பிள்ளை போற வழியில் ஆபத்திருக்கு என்று தெரிந்த பின்பு கட்டாயப்படுத்தி போக வேண்டாம் என தடுக்காட்டி அந்தப் பெற்றோர் இருந்தால் என்ன இல்லாமல் விட்டால் தான் என்ன? ஆபத்தான வழியிலபோய் சாகக்கூடாது சனங்களும். தனியத் தனிய ஆமிக் கட்டுப்பாட்டுக்கை போறதால பெண் பிள்ளைகளை ஆமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துறான். கனபேரை சுட்டுக் கொன்றதை கண்ட போராளிகள் அனுப்பிய படங்களைப் பாரக்கா என தன் மடிக்கணனிக்கு வந்திருந்த படங்களை காண்பித்தாள்.' உடம்பெல்லாம் நடுங்கி வியர்த்தது.

உண்மையில் போராளிகள் பழிச்சொல்லை ஏற்று வழிகாட்டும் வல்லமை பெற்றவர்கள்தான். அவள் தொடர்ந்தாள். 'அக்கா கூட்டமாக கடைசி நேரம் ஆமிக் கட்டுப்பாட்டுக்க போக வேண்டி வரும். அப்போ போங்க. தனியா போகத அக்கா" அவள் விழிகள் கலங்கின. நீ என்னுடன் வா என்றேன்.

'இல்லை அக்கா நான் எவ்வளவு செய்தியை அனுப்ப முடியுமோ அவ்வளவு செய்திகளை ஆவணங்களை அனுப்புவேன். கடைசியில் வெடிச்சிடுவன் அக்கா" என்றாள். அவள் தன்னுடன் இறுக்கிக் கட்டியிருந்த தற்கொலை அங்கியை மெல்லக் காட்டினாள். நான் ஒன்றுமே கதைக்கவில்லை. இறுகிப் போன இதயத்தோடு இருந்த இரும்பொறையை இன்றுவரை மறக்க முடியவில்லை. கடைசிவரை முகாமில்கூட நான் அவளைக் காணவில்லை.

சில போராளிகள் தற்கொலை அங்கிகளை அணிந்தும், குண்டுகளை வெடிக்க வைத்தும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டார்கள். அந்த வகையில் இன்றும் பேசப்படும் ஒருவராக மாலதி படையணியைச் சேர்ந்த மலைமகள் இருக்கிறார். பழகுவதற்கு இனிமையானவர். ஆற்றல்களை வித்தியாசமான வகையில் வெளிப்படுத்தும் ஆற்றலுடையவர். சுதந்திரப் பறவைகள் பத்திரிகை விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவால் வெளியிடப்படும் மாதாந்தப் பத்திரிகை ஆகும். அதன் ஆசிரியராகவும் பங்காற்றியவர். அவரது எழுத்துத்திறன் வாசிப்போரை கவர்ந்திழுக்கும். எந்த நேரமும் உற்சாகம் நிறைந்து காணப்படுவார். அவரது பேச்சிலும் செய்கையிலும் நளினம் நிறைந்திருக்கும். தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பதில் வல்லவர்.

(சாட்சியம் நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீரில் கரைந்த 500 நாட்கள்

■ யோக நாராயணன்

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தங்கள் உறவுகளைக் கண்டுபிடித்துத் தரும்படி தொடங்கிய போராட்டம் 500 நாட்களைக் கடந்து விட்ட நிலையிலும் எவ்வித தீர்வும் கிட்டாத ஏமாற்றத்தையடுத்து யாழ்ப்பாணம் நல்லூரில் சிறப்புப் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதிகாரமுள்ள மனிதர்களிடம் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துத் தங்கள் கோராட்டங்களை நடத்தினர். காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகைள் மீண்டும் காண வேண்டும் என்ற தவிப்புடன் வெயில், மழை, பனி, பசி, தாகம் எனச் சகல துன்பங்களையும் தாங்கி கூடாரச் சேலைகளின் கீழ், வீதியோரங்களிலும் ஆலய வாசல்களிலும் அமைதிப் போராட்டங்களை அவர்கள் நடத்தி வருகின்றனர். அவர்களின் அழுகுரல் காற்றை நிறைத்து அதிகார பீடங்களின் செவிப்பறைகளை அறைந்தபோது அதிகாரபீடங்கள் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டன. மக்களின் கண்ணீர் ஆறாக ஓடியபோது அவர்களின் கண்கள் மூடிக்கொண்டன. காணாமல் ஆக்கப்பட்டோரின் ஏக்கங்களும் தவிப்புகளும் தூக்கமற்ற இரவுகளும் அதிகாரத்தில் அமர்ந்திருப்போரில் எவ்வித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில்தான் மனிதர்களின் மேல் மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் நல்லூர் கந்தனிடம் தங்கள் தவிப்பை வெளியிட்டு வேண்டுகை செய்துள்ளனர். ஆனால் கந்தன் கிருபை கொண்டு வேலெடுத்து ஆணையிட்டாலும்கூட அதிகாரம் கொண்டர்கள் அசைந்து கொடுப்பார்களா என்பது சந்தேகமே.

எனினும் மனிதர்களிடம் நம்பிக்கை இழந்த நிலையில் மக்கள் முருகனிடம் தங்கள் வேண்டுதலை முன்வைத்துள்ளனர். 2015 ஆம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அதிகாரத்தில் ஏற்றுவதில் தமிழ் மக்களின் பங்கு அளப்பரியது. தமிழ் மக்களின் ஆதரவு இல்லையேல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிக் கதிரைக் கனவைக்கூட கண்டிருக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் என்ற அடிப்படையில் மேற்கொண்ட இனப்படுகொலை நடவடிக்கைகள் உட்பட தமிழ் மக்களுக்கு எதிராகப் போரின் போதும், போரின் பின்பும் மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாக அவரை ஆட்சியிலிருந்து அகற்றுவதில் தீவிரமாகச் செயற்பட்டனர். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது ஆதரவைப் பகிரங்கமாகவே பிர்கடனம் செய்தது. அடிப்படையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் காணப்பட முடியும் எனவும், இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட முடியுமெனவும் மக்கள் எதிர்பார்த்தனர். அதேவேளையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுமெனவும் வாக்களிக்கப்பட்டது.

ஆனால் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்து விட்டநிலையிலும் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விடுவித்தல் வலிந்து காணாமல் செய்யப்பட்டோரைக் கண்டறிதல், போர்க் குற்றங்கள் தொடர்பான நேர்மையான விசாரணைகள் போன்ற எந்த ஒரு பிரச்சினைக்கும் உருப்படியான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கமும்கூட நம்பிக்கையிழக்கும் நிலையை நோக்கி நகர்கிறது. இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அரசின் மீது முற்றாகவே நம்பிக்கையிழப்பது தவிர்க்கவே முடியாது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியபோதும் அரச தரப்பிலிருந்து பதிலெதுவும் வரவில்லை. அது மட்டுமின்றி இவற்றைப் பொருட்படுத்தக்கூட இல்லை.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்தனர். த.தே.கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் எமது விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயகக் குரலாக உருவாக்கப்பட்டது என்ற அடிப்படையில் அனைத்துத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் தலைமை சக்தியாகவும், தமிழ் மக்களின் ஐக்கியத்தின் சின்னமாகவும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை கூர்மையுடனும் உறுதியுடனும் முன்னெடுக்கும் என்ற அசையாத நம்பிக்கையைத் தமிழ் மக்கள் கொண்டிருந்தனர்.

ஜெனீவாவில் அரசாங்கம் வாக்களித்த விடயங்களை நிறைவேற்றுவதில் இழுத்தடிப்பையும் விரோதப் போக்கையும் கடைப்பிடிக்கும்போது சில மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலுள்ள சிலர் அவற்றை நியாயப்படுத்தி வந்தனர். அது மட்டுமன்றி அரசாங்கத்துக்குச் சில விடயங்களில் அழுத்தம் கொடுத்தால் அது மஹிந்த தரப்புக்குச் சாதகமாகப் போய்விடும் என அவர்கள் பூச்சாண்டி காட்டி வந்தனர். இந்த நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் ஒரு கண்துடைப்பாக மேற்கொண்டும் , காணி விடுவிப்பில் அக்கறையற்றும் வெவ்வேறு முனைகளில் புதிதாகத் தமிழர்களின் காணிகளை நிரந்தரமாக அபகரித்தலிலும் அரச தரப்பினரும் பேரினவாத சக்திகளும் ஈடுபட்டனர்.

இந்நிலையில்தான் கேப்பாப்பிலவு உட்பட காணி விடுவிப்புக்கான போராட்டங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடித்துத் தரும்படியான போராட்டங்கள் மக்களால் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்மக்களின் அரசியல் தலைமை என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போராட்டங்களுக்கு தலைமையேற்று ஒன்றிணைத்து, விரிவுபடுத்தி பேரெழுச்சியாக முன்கொண்டு சென்றிருக்கவேண்டும். நிச்சயமாக அப்படியான ஓர் எழுச்சி சர்வதேசத்தை எமது பிரச்சினைகளில் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கும். அதன் காரணமாக அரசாங்கத்துக்கு சர்வதேச ரீதியான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் காணி விடுவிப்பு போன்ற போராட்டங்களை அரசாங்கத்தைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

எனவேதான் எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தனரோ அவ்வாறே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டனர். அதுமட்டுமன்றி காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அரசாங்கத்தை வலியுறுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தவில்லை என்பதும் மக்களின் கோபத்துக்கு இன்னொரு காரணமாகும். உதாரணமாக கடந்த எட்டு வருடங்களாக சிறையில் வைக்கப்பட்டு 27.12.2017 அன்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நவரத்தினம் நிசாந்தன் ஊடகவியலாளர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டனர் எனக் கருதப்படும் பலர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர்களில் ஒரு சிலர் சித்திரவதை காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்திருந்தார்.


இக்கூற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவே மறுக்கவோ இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவோ உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொள்ளவோ இல்லை. ஒட்டுமொத்தமாக

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் இலக்கியவாதியின் பார்வையில்...

# உடுவில் அரவிந்தனின் பாழ்வெளி




எமது மக்கள் மத்தியில் நிலவிவரும் ஐதீகங்கள், நம்பிக்கைகள் என்பனவற்றில் பல மூட நம்பிக்கைகள் எனவும் பகுத்தறிவால் நிராகரிக்கப்பட்டவை எனவும் கூறப்படுகின்றன. மேலோட்டமான பார்வையில் அவை அப்படித் தோன்றினாலும் சில காலத்தின் விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளில் அர்த்தமுள்ளவை எனக் கண்டுபிடிக்கப்பட்டதுமுண்டு.

எப்படியிருந்தபோதும் எந்த ஒரு ஐதீகத்துக்கும் ஒரு மூலம் உண்டு என்பதை மறுக்க முடியாது. அதற்கு ஒரு உயிரோ, உயிருடன் சம்பந்தப்பட்ட சம்பவமோ, அச்சம்பவத்தால் ஏற்பட்ட மாற்றமோ காரணமாயிருக்கலாம். சம்பவங்களின் சில உண்மையாகவும் இருப்பதுண்டு. அதேவேளையில் பல்வேறு சம்பவங்களும் சந்தர்ப்பவசமாக ஒன்றுடன் ஒன்று கரையும்போது வேறு ஒரு வடிவத்தில் எழுந்தவையாகவும் இருக்கலாம். ஆனால் காலம் எவ்வளவோ விடயங்களை மாற்றிவிட்ட போதிலும் பல ஐதீகங்கள் எமது மக்கள் மத்தியில் முழுமையாகவோ பகுதியாகவோ நின்று நிலைப்பதை நாம் அவதானிக்கலாம்.

பதினைந்து சிறுகதைகளைக் கொண்ட உடுவில் அரவிந்தனின் அந்த நூலில் 'ஊருணி" என்ற சிறுகதை எமது மக்கள் மத்தியில் நிலவி வரும் ஏழுதலை நாகமும் அதன் ஒளிவீசும் மாணிக்கக்கல் பற்றியதுமான ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதிலுள்ள சிறப்பம்சங்கள் என்னவெனில் இந்த நம்பிக்கை தொடர்பான சரி, பிழை பற்றிய வியாக்கியானத்துக்குள்ளோ அல்லது சில மூட நம்பிக்கைகளை நியாயப்படுத்தவோ அவரின் எழுத்துக்கள் முயலவில்லை. எமது மண் ஆக்கிரமிக்கப்படுவது பற்றியும் எமது தொன்மைச் சின்னங்கள் பிறரால் உரிமை கொண்டாடப்படுவது பற்றியும் எமது செழித்திருந்த வாழ்வு சிதைக்கப்பட்டமை பற்றியும் அந்நிய வாசனை எமது சொந்தச் சுகங்களை அழித்தமை பற்றியும் பாம்பு, கிழவி பற்றிய நம்பிக்கைக்கூடாகக் கதை நகர்கிறது. அந்தப் பாத்திரங்களும் எமது பாரம்பரிய வாழ்வின் பெறுமதியையும், சிறப்பையும் வெளிப்படுத்தும் குறியீடுகளாகவும் பார்க்கப்பட முடியும்.

கதையைச் சாதாரணமாக வாசித்து முடித்துவிட்டு இறுதியில் பாம்பு லொறிச் சக்கரத்திற்குள் சிக்கி இறந்து கிடந்தமையும், அதன் பின் கிழவி காணப்படாமையும் எம் முன் சில கேள்விகளை எழுப்புவதுடன் மீண்டும் வாசிக்கத் தூண்டுகிறன. பாம்பின் இறப்புப் பற்றியும், கிழவியின் காணாமற்போனவை தொடர்பாகவும் படித்த பின்பு மீண்டும் வாசிக்கும்போது அக்கதைக்குள் இருக்கும் பல ஆழமான செய்திகளை எம்மால் தரிசிக்க முடிகிறது. பாரம்பரியமாக நிலவி வரும் ஒரு ஐதீகம் ஊடாக எமது இருப்பு பலவீனப் படுத்தப்படும் ஒரு காலமாற்றத்திற்குள் கையலாகதவர்களாக இருக்கும் அவலம் சிறுகதை வடிவில் செதுக்கப் பட்டிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இச்சிறுகதைக்கு ஒரு தனித்துவம் எம்மால் வழங்கப்பட்டுள்ளதென்றால் ஏனையவை தரமற்றவை என்ற அர்த்தமல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதத்தில் முத்திரை பதிக்கின்றன. இதில் நான்கு சிறுகதைகள் எந்தப்பாவமும் அறியாத பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது சிந்தனைக்கு உட்படுகிறது. அவர்கள் மூன்று படையினரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொல்லப்படும் பெண்களின் கதை இவை. மூன்று கதைக்கும் மூலக்கரு ஒன்றாயினும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பார்வையில் வெவ்வேறு கோணங்களில் சிறந்து நிற்கின்றன. இவற்றில் பாதிக்கப்பட்ட பாத்திரங்களை வாசகர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை.

ஒரு புத்தர் சிலை, ஒரு பக்கத்து வீட்டுக்காரன் ஒரு மருத்துவர் என மூன்று கதைகளிலும் மூன்று பாத்திரங்களே வாசகர்களுடன் பேசுகின்றனர். ஆனால் பாத்திரங்களின் உணர்வுகள், கதைக்களம் என்பனவற்றுக்குள் வாசகர்களை இறக்கிவிடுகிறார். அரவிந்தன் ஒரு பெண் தான் உணவு வழங்கும் காகங்களாலேயே குதறப்படுவது நல்லதோர் படிமமாக இருந்தாலும், அதற்கும் அப்பால் படிப்பவர்களைப் பல கேள்விகள் சூழ்ந்து வரும் ஒரு வலிமை பெற்று நிற்கிறது.

அடையாளம் உண்மைச் சம்பவத்தை அப்படியே பதித்ததுபோல் தென்பட்டாலும் அதன் வெளிப்படுத்தலில் எவ்வித குறையுமில்லை. குறிப்பாக அதில் கையாளப்படும் மொழி ஆளுகை நூலாசிரியர். எவ்வளவு தூரம் ஒவ்வொரு சிறிய விடயங்களையும் துல்லியமாகவும் ஆழமாகவும் அவதானிக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

சுடலைக் குருவி என்ற கதையிலும் எம்மிடம் வழக்கில் உள்ள ஐதீகத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். எனினும் அதனூடாகச் சமகாலச் சம்பவங்கள் பார்க்கப்படுவது ஒரு சிறம்பம்சமாகும். இறுதியில் சாக்குருவியின் வருகை மூலம் சாவு அச்சத்துடனான வாழ்வு ஒரு சில வார்த்தைகளிலேயே வெளிப்படுத்தப்படுகிறது.

கல்லறைப் பக்கங்கள் என்ற படைப்பில் இடம் பெயர்வின்போதான அவலங்கள் பேசப்படுகின்றன. இறுதியில் சிறுவனின் மூடிய கரங்களுக்குள் காணப்படும் எருக்கலம் பூக்கள் ஒரு முக்கிய செய்தியைச் சொல்வதை அவதானிக்கலாம். அதாவது எருக்கலம் பூக்கள் நோய் தீர்க்கும் மருத்துவக் குணம் கொண்டவை என்பதுதான் அது.

இந்நூலில் வரும் ஒவ்வொரு சிறுகதையும் பல செய்திகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் நெஞ்சைத்தொடும்வகையிலும் சித்தரிக்கின்றன. இது ஒரு பாராட்டுக்குரிய படைப்பு என்பது மட்டுமின்றி காத்திரமானது. என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்ரின் மொழிப்பயன்பாடு கவர்ச்சியாகவும் துல்லியமாகவும் ஆழமாகவும் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

## கண்ணீரில்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருதரப்பினருமே இதை கண்டும் காணாமல் கைவிட்டுவிட்டனர். இறுதியில் நீண்ட இழுபறிகளின் பின் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவர் சாலிய பீரிஸ் கிராம அலுவலர்கள் மூலம் 1300 கோவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியல் தயாரிக்க வடக்கில் ஐந்தும் கிழக்கில் மூன்றும் ஏனைய இடங்களில் நான்கும் என 12 உப அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

மேலும் விசாரணைளைக் கண்டறியும் விடயங்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார். எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகமும் ஒரு காலம் கடத்தும் நடவடிக்கை என்பதையும் கவரும் கண்துடைப்பு என்பதையும் மக்கள் வெளிப்படுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும். அரசாங்கத்தின் ஏமாற்றுகளும் அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கி வருவதும் காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்புகளுக்குள் சில சக்திகள் ஊடுருவி தமிழ் மக்களின் ஐக்கியத்தை சீர்குலைக்கும் ஆபத்து உண்டு என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்துகொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

– வல்வை ரவி –

தொடர் புபு

# மீசாலை

**வட** இலங்கையிலுள்ள முதன்மையான பண்பாட்டு ஊர்களுள் மீசாலையும் ஒன்று. இது யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவில். சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இடமாகும். இவ்வூரின் வடக்கு எல்லையில் சரசாலை, மந்துவில் ஆகிய ஊர்களும் கிழக்கு எல்லையில் அல்லாரையும் தெற்கில் சங்கத்தானையும் மேற்கில் மட்டுவில், சரசாலை, கல்வயல் ஆகிய ஊர்களும் உள்ளன. மீசாலை வடக்கு, மீசாலை தெற்கு, மீசாலை மேற்கு என மூன்று கிராம அலுவலர் பிரிவுகளாக இவ்வூர் பிரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - கண்டி வீதி இவ்வூரின் ஊடாகச் செல்கின்றது. இவ்வீதியின் வழி சாவகச்சேரியில் இருந்து இவ்வூர் சுமார் 3 கிலோமீற்றர்கள் தொலைவிலும் கொடிகாமத்திலிருந்து சுமார் 4 கிலோமீற்றர்கள் தொலைவிலும் உள்ளது. இவ்வீதிக்கு இணையாக ஒரு தொடருந்துப் பாதையும் தொடருந்து நிலையமும் அமைந்துள்ளன.

மீ+ஆலை - மீயாலை, மீசாலை. சாவகச்சேரிக்குக் கிழக்கே மீசாலை அமைந்துள்ளது. மீசு+ஆலை - மீசாலை உயர்ந்த மரச்சோலைகள் உள்ள இடம் என்றும் (மீசாலை, மாசாலை) மாசாலை - மாமரச் சோலைகள் நிறைந்து காணப்படும் இடம் என்றும் விளக்கம் கூறப்படுகின்றது. இந்தக் கருத்துக்களை சான்றுப்படுத்தும் வகையில் தென்மராட்சிப் பகுதியிலேயே மா, பலா, தென்னை மரங்கள் இன்னும் சோலையாக வளர்ந்து காட்சி தரும் இடமாக மீசாலை விளங்குவதைக் காணலாம். இன்னொரு கருத்துப்படி இக்கிராமம் மாசாலை எனவும் அது மருவிப் பின் மீசாலை ஆயிற்று என்றும் கூறுவர்.

இங்குள்ள பிள்ளையார் கோவில் மாவடிப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு காணியிலும் மாமரத்தைக் காணலாம். மாம்பழமும் அதிகளவில் கிடைக்கபெறுகிறது. வெள்ளை மாவடி, கரும்பு மாவடி, பாண்டிக்கேணி (பாண்டி - ஒருவகை மாமரம்) ஆகிய குறிச்சிப் பெயர்கள் மாமரத்தை முதனிலையாகக் கொண்டு பெயர் பெற்றிருத்தலும் இங்கு சிறப்பாக நோக்கற்பாலது.


மீ+ஆலை - மீயாலை, மீ இலுப்பை மீசாலையில் இன்றும் இலுப்பை மரங்கள் செறிந்து காணப்படுகின்றன. பண்டைய நாளில் இங்கு இலுப்பை எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் இருந்தபடியால் மீசாலை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணவும் இடமுள்ளது. சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் இடம்பெறும் மீசாலை, மீயாட்சி முதலான சொற்றொடர்கள் இவ் இடப்பெயருடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கவை. இவ்வூர் தலைவனாக மீகாமன் என்போன் இருந்தான் என் வெடியரசன் பாடல் கூறுகின்றது. மீசாலை வடக்கில் தெருவாரம் என்ற குறிச்சி காணப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் சாவகச்சேரியில் இருந்து மந்துவில் ஊடாக ஒரு பெரிய தெரு அமைக்கப்பட்டதோடு அதன் அருகில் வாழ்ந்த பகுதியினர் தெருவோரத்தினர் எனப்பட்டனர். அப்பகுதி தெருவோரமாய் இருந்து பிற்காலத்தில் தெருவாரமாக மாறியது.


மணல் பிரதேசமாக அமைந்துள்ள இவ்வூரின் மாம்பழம், பலாப்பழம் சுவைக்குப் பெயர்போனவை. எந்தப் பகுதியிலும் இல்லாத தனிசிறப்பைக் கொண்டவை. இந்த மண்ணில் வாழும் மக்களும் மண்ணும் வந்தாரை வரவேற்று அரவணைக்கும் பெருந்தன்மை கொண்டவர்களாகவும் எல்லோருடனும் அன்பு கொண்டவர்களாகவும் வாழ்கின்ற உயர் பண்பாட்டுக் கூறினைக் காணலாம்.

ஆரம்ப காலத்தில் கிராமங்களை நிர்வகிக்க அதிக அதிகாரம் கொண்டவர்களாக கிராமம் தோறும் உடையார்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வகையில் மீசாலையை நிர்வகிக்க வீரபாகு உடையார் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்து நெறியிலும், கல்வித்துறையிலும் மீசாலை தனிச்சிறப்பைப் பெற்றிருந்தது. கல்வி வளர்ச்சியின் பாதையில் மீசாலையில் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை உரோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, மீசாலை கனகாம்பிகை வித்தியாலயம், மீசாலை அல்லாரை தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன அமைந்துள்ளன.

ஈழத் திருநாட்டின் வடபால் தென்மராட்சியில் அமைந்துள்ள மீசாலை மண்ணும் மக்களும் என்றும் தமிழ் மண் வாசனை வீசும் பாரம்பரியக் குடிகளாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

### மேடம்
நண்பர் மற்றும் உறவினர் உதவுவர். மனதில் தைரியம் வளரும். திட்டமிட்ட பணி சிறப்பாக நடைபெறும். வாழ்வு திருப்திகரமாக அமையும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப்பயணத்தை அளவுடன் மேற்கொள்ளலாம்.

### துலாம்
உங்கள் செயல்களில் மனிதாபிமானம் நிறைந்திருக்கும். விலகிச் சென்றவரும் விரும்பி அன்பு பாராட்டுவர். தாயின் அன்பும், ஆசியும் ஊக்கம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் மனதில் தெளிவும், அறிவுக்கூர்மையும் ஏற்படும்.

### ரிஷபம்
உறவினர்களிடம் கூடுதல் அன்பைக் காண்பீர்கள். வாகனப் பயன்பாடுகள் அதிகரிக்கும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் அன்பு மனதில் நெகிழ்ச்சியைத் தரும். தொழில், வியாபாரம் செழித்து வளர புதிய உத்திகளைப் பயன்படுத்துவீர்கள்.

### விருச்சிகம்
உங்கள் செயல்களில் மானசீகமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிட்டும். சமூக நிகழ்வு இனிய படிப்பினையைத் தரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். வழக்கு, விவகாரங்களில் சமரசத் தீர்வு கிடைக்கும்.

### மிதுனம்
புதிய திட்டங்களைத் தீட்டி அதன்படி செயல்படுவீர்கள். அன்புக்கு உரியவரின் உதவி நன்மை தரும். பணவரவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவி குடும்பத்தின் ஒற்றுமையைப் பாதுகாத்திடுவார்.

### தனுசு
உங்கள் நல்ல குணத்தை நண்பர்கள் பாராட்டுவார்கள். பேச்சிலும் செயலிலும் நிதானம் நிறைந்திருக்கும். குடும்பத்தேவை நிறைவேறும். பிள்ளைகளின் அறிவாற்றல் மேம்பட உதவுவீர்கள். நோய்த் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

### கடகம்
உற்சாகம் வெளிப்படும். உங்களின் நற்செயலை பலரும் பாராட்டி மகிழ்வர். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். பொதுவிவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். வெளியூர் பயணங்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

### மகரம்
சமூக நிகழ்வினால் புதிய அனுபவம் உண்டாகும். கடந்த கால நற்செயல்களுக்கான பலன் கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை ஏற்றுச் செயல்படுவர். வியாபாரத்தில் வளர்ச்சி வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்துவீர்கள்.

### சிம்மம்
மனதில் உற்சாகம் பிறக்கும். முக்கியமான பணிகளை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பலரும் வியக்கும் அளவில் வாழ்க்கைத்தரம் உயரும்.

### கும்பம்
எதிர்பார்த்த சில நன்மைகள் கிடைக்கும். உடன்பிறந்தவரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும். பிள்ளைகள் உங்கள் வார்த்தையை மதித்துச் செயல்படுவர். கூடுதல் சொத்து வாங்க வாய்ப்பு ஏற்படும்.

### கன்னி
சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்களில் அளப்பரிய நன்மை கிடைக்கும். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அறிவாற்றல் மேம்படும். குடும்ப வருமானம் திருப்திகரமாகும். ஆரோக்கியம் பலம் பெறும்.

### மீனம்
தந்தை வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் ஓரளவு நிறைவேறும். வாகனப் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் தாமதம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காத்திட வேண்டும்.



கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் 16வது திருக்குறள் மாநாடு பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

## இவ்வார நிகழ்வு



விசேட பொது வைத்திய நிபுணர் ஜெயலஷ்மி யுதிஷ்டிரனின் பரதநாட்டிய நிகழ்ச்சி எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.சரவணபவனும் அவரது பாரியார் திருமதி யசோதை சரவணபவனும் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



மாணவர்களுக்கிடையே கலாசார பரிமாற்றத்தை ஏற்படுத்தும் விதமான ஒன்றுகூடல் கடந்த வாரம் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.




மாற்றுத் திறனாளிகளுக்காக 'ஒரு நடை' என்ற தொனிப்பொருளில் நடை பவனி ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. எதிர்வரும், 27 - 29 களில் நடைபெறவிருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான பராலிம்பிக்ஸ் நிகழ்வையொட்டி நடைபெற்ற விழிப்புணர்வுப் பயணம் என்றது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்புக் கல்லடி பாலத்திற்கு அருகாமையிலுள்ள அரச காணியைக் கைகப்படுத்த முற்பட்டதைத் தடுத்து நிறுத்திய பொதுமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குறள்

## பலர் விளக்கங்கள்



**ஒரு குறள் மூன்று விளக்கங்கள்.**
**குறள் 11:**
**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.**

**மு. வரதராசன் உரை:**
மழை பெய்ய உலகம் வாழ்ந்துவருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.

**கலைஞர் உரை:**
உலகத்தை வாழ வைப்பது மழையாக அமைந்திருப்பதால் அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.

**சாலமன் பாப்பையா உரை:**
உரிய காலத்தில் இடைவிடாது மழை பெய்வதால்தான் உலகம் நிலைபெற்று வருகிறது் அதனால் மழையே அமிழ்தம் எனலாம்.

ஈசாப் நீதிக் கதைகள்

# தேளும் தவளையும்



**அது** ஒரு அழகிய காடு, அந்த காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத் தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்கு போக வேண்டி இருந்தது. அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, ஆமை போன்றவைகளிடம் தேள் உதவி கேட்டது, ஆனால் அந்த பொல்லாத தேள் தம்மை கொட்டிவிடும் என்று அவை மறுத்து விட்டன.

எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக்கொண்டு இருந்தபோது அந்த நீரோடையில் தவளை ஒன்று வந்து கொண்டிருந்தது. தவளையைக் கண்ட தேள், "தவளையாரே! நான் அக்கரைக்குச் செல்லவேண்டும் என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா?" என்று கேட்டது. "நானும் அக்கரைக்குத்தான் போகிறேன், என் முதுகில் ஏறிக்கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டுவிடுகிறேன்!", என்றது தவளை. தேளும் தவளையின் முதுகில் ஏறிக்கொண்டது. தவளை நீரில் நீந்திச்செல்ல அரம்பித்தது, சிறிது தூரம்தான் தவளை சென்றிருக்கும் தேளுக்கு ஒரு யோசனை வந்தது, நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கின்றேன்.

ஆனால் நான் ஒரு நாளும், தவளையை கொட்டவில்லை, இந்த தவளையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று தவளையை கொட்டிப் பார்க்க நினைத்தது. தேள் தவளையின் முதுகில் கொட்டியது. அனால் தவளை பேசாமல் போய்க்கொண்டிருந்தது. தேள் தவளையைப் பார்த்து, "தவளையாரே! உமது உடம்பில் வலியே வருவதில்லையா?" என்று கேட்டது. தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத தவளை, "எனது முதுகு வழவழப்பானது. அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை" என்று சொன்னது தவளை.

ஆனால் எனது கழுத்துப்பக்கம் மென்மையாக இருக்கும். இதில் தான் எனக்கு வலிகள் காயங்கள் ஏற்படும் என்று சொன்னது தவளை. ஓகோ அப்படியா? என்று கேட்ட தேள், மெதுவாக தவளையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது. கழுத்தில் இருந்து தலைப்பகுதிக்குச் சென்ற தேள் கொட்டவருவதை அறிந்து தவளை தலையை தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டது. தேள் தண்ணீரில் விழுந்து விட்டது. தனக்கு உதவி செய்த தவளைக்கு கேடுவிளைவிக்க நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. தவளை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

நீதி: ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின், அவரின் உதவியை நாம், எம் வாழ் நாளில் என்றுமே மறந்து விடலாகாது. அவருக்கு நன்றி யுடையவனாக இருத்தல் வேண்டும். மாறாக அவருக்கு கெடு செய்ய நினைப்போமாயின், அது எம்மையே வந்து சேரும்.



# மயிலே, மயிலே ஆடிவா

மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!

# அட அப்படியா?




## அறிவிப்புப் பலகை

அறிவிப்புப் பலகையில் எத்தனை பக்கங்கள் உள்ளதோ அத்தனை வளைவான சாலைகளை பயணி சந்திக்கப்போகிறார் என புரிந்து கொள்ளலாம். சிவப்பு நிறம் தேர்ந் தெடுக்கப்பட்டதற்கு அதன் அலைநீளமே முக்கியகாரணம். வட்டவடிவம் (ரயில்பாதை), ஆக்டகன் வடிவம் (இணைப்புச்சாலை), செவ்வகம் (முக்கிய அறிவிப்பு) என புரிந்துகொண்டால் வேகம் குறைத்து பயண சந்தோஷ த்தின் உச்சத்தைத் தொடலாம்.

## 18 வயதினிலே...

ஜப்பானில் வயதுவந்தோர் அதிக இளமையுடன் தோன்றக் காரணம் அரசின் சட்டம்தான். 2022 ஆம் ஆண்டில் 18 (20 வயதிலிருந்து குறைத்து) வயது என அதிகாரபூர்வமாக சட்டத்தைத் திருத்தியுள்ளது. 1876 ஆம் ஆண்டுக்குப்பிறகு மக்களின் வயது வந்தோர் சட்டத்தை அரசு முதல்முறையாக மாற்றியுள்ளது. இனி ஒருவர் 18 வயதைத் தொட்டால் பெற்றோரின் தலையீடின்றி சுயமாகத் திருமணம் செய்ய அரசு வாய்ப்பளிக்கிறது.



# பழமொழிகள் பிழையும் திருத்தமும்



**பந்திக்கு முந்து ! படைக்கு பிந்து !!**
**பொருள்:**
பந்திக்கு முதலில் போய் உட்கார்ந்து கொள்ள வேண்டும் இல்லாவிடில் பலகாரம் நமக்கு முழுமையாக கிடைக்காது, போருக்கு செல்பவன் படைக்கு பின்னால் நின்று கொள்ள வேண்டும். அப்படி செய்தால், உயிருக்கு ஆபத்து வராது.
**உண்மையான பொருள்:**
பந்திக்கு முந்து என்பது சாப்பிட போகும் போது நமது வலது கை எப்படி முன்னோக்கி செல்கிறதோ, அது போல போரில், எவ்வளவு தூரம் வலது கை வில்லின் நாணைப் பிடித்து பின்னால் இழுக்கிறதோ, அந்த அளவுக்கு அம்பு வேகமாய் பாயும். இது போருக்கு போகும் வில் வீரருக்காக சொல்லியது

**வீட்டுக்கு வீடு வாசற்படி!**
**பொருள்:**
ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு பிரச்சினை இருக்கும்.
**உண்மையான பொருள்:**
மேன்மையான வாழ்க்கை என்னும் வீட்டுக்கு ஆன்மிகம் என்னும் வீடுதான் வாசற்படி என்பதே சரியான பொருள்.




1. உலகின் சிறிய கடல் எது?
2. உலகிலேயே அதிகளவில் காபி விளையும் நாடு எது?
3. இந்தியா, வங்கதேசம், சீனா இடையே ஓடும் நதி?
4. எக்ஸ் கதிர்களால் குணமாக்கப்படும் நோய் எது ?
5. வெற்றிடத்தின் வழியே செல்ல இயலாதது எது ?

விடைகள்: 1. [illegible] 2. [illegible] 3. [illegible] 4. புற்று நோய் 5. ஒலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ஜுனன் பக்தி



அர்ஜுனன் மீதுதான் கிருஷ்ணன் அதிகப் பிரியம் வைத்திருக்கிறார் என்று பாண்டவர்கள் மனதுக்குள் லேசாக ஒரு பொறாமை இருந்தது.

வனவாசத்தில் பாண்டவர்களைச் சந்திக்க கிருஷ்ண பரமாத்மா ஒருநாள் வந்திருந்தார். குந்தியிடம் அவர் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அர்ஜுனன் மரத்தடியில் உறங்கிக் கொண்டிருந்தான். கண்ணன் ஒரு பாறையின் மேல் அமர்ந்திருக்க, பாண்டவர்கள் மற்ற நால்வரும் அவர் காலடியில் அமர்ந்திருந்தார்கள்.

அந்த சமயம் பருந்து ஒன்று, பெரிய கருநாகத்தைத் தன் கால் நகங்களில் கவ்விப் பிடித்தபடி அவர்கள் தலைக்கு மேல் பறந்தது.

குந்தி தலைக்கு நேரே பறந்தபோது நாகம், பருந்தின் காலில் இருந்து நழுவி விடுபட்டு அவள் தலைக்கு மேல் விழுந்து கொண்டிருந்தது.

பாண்டவ சகோதரர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

பரமாத்மா உடனே, "அர்ஜுனா...!" என்றார். வானத்தைப் பார்த்தார்.

டக்கென்று கண் விழித்த அர்ஜுனன் கண்ணனின் கண் நோக்கிய திசையில் தன் தலைமாட்டில் இருந்த வில்லைப் படுத்தபடியே நாண் ஏற்றி நொடிக்குள் பாணத்தைத் தொடுத்தான்.

நாகம் அம்பில் செருகி அப்பால் விழுந்தது. குந்தி நாகத்திடம் இருந்து தப்பினாள்.

தூங்கும்போதும் கண்ணன் நினைவாகவே இருந்த அர்ஜுனனின் மகிமையை மற்ற சகோதரர்கள் உணர்ந்து அவனை ஆரத் தழுவினர்.

பரந்தாமன் தன் வாயைத் திறவாமல் அர்ஜுனனின் மகிமையை மற்றவர்களுக்கு உணர்த்திவிட்டு குந்தியிடம் பேச்சைத் தொடர்ந்தார்.



# கேட்கக் காதுள்ளவன் கேட்கக் கடவன்

விவசாயி ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான். சில விதைகள் பாதையில் சிந்தின. பறவைகள் வந்து அவற்றைப் புசித்தன.

சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்தன. அந்த விதைகளில் ஒன்றிரண்டு பாறையின் மேல் முளைத்தாலும் அங்கே ஈரம் இல்லாததனால் அவை கருகிப் போயின. சில விதைகள் முள் அதிகம் உள்ள இடங்களில் விழுந்தன. முள் கூட்டத்திடையே விழுந்த அந்த விதைகள் முட்களால் நெருக்கி அடிக்கப்பட்டு வீணாயின. சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்துப் பலன் கொடுத்தன. விதைகளில் மாற்றமில்லை. அவை விழும் இடத்தைப் பொறுத்துத்தான் அவற்றின் பலன் இருக்கிறது. விதை தேவனுடைய வசனம். சிலர் போகிற போக்கில் வசனத்தைக் கேட்கிறார்கள். வழியருகே விதைக்கப்பட்ட விதைகளைப் போன்றது இது. கேட்டவற்றைப் பாதுகாத்து வளப்படுத்தும் வழியும் வசதியும் அவர்களுக்கு இல்லை. வழியில் விதைத்த விதைகளைப் போல தேவனின் வசனங்கள் வீணாகின்றன.

ஈரமற்ற நெஞ்சம் கொண்டவர்கள் காதில் விழும் வசனங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அதை முழுமையாக உள்வாங்கும் திறன் அவர்களுக்கு இல்லை. எனவே அந்த வசனங்கள் அவர்கள் மனங்களில் வேர்கொள்வதில்லை. சோதனைக் காலங்களில் உதவும் அளவுக்கு வளருவதில்லை. பல்வேறு ஆசாபாசங்களில் சிக்கியிருக்கும் மனிதர்கள் கேட்கும் நல்ல வசனங்கள் முள் உள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதைகள் சிக்கித் திணறுவதைப் போலச் சிக்கிச் சீரழிகின்றன. அவர்களுக்கும் அது பயன்படுவதில்லை.

பக்குவமான மனம் கொண்டவர்களுக்குச் சொல்லப்பட்ட வசனம் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளைப் போன்றவை. நல்ல நிலம் விதையை நன்கு வளர்த்தெடுத்துப் பலன் தருவதுபோல இவர்கள் வசனங்களின் பலனை முழுமையாக அடைவதுடன் பிறருக்கும் பலன் தருகிறார்கள்.

# சொர்க்கம் தாயின் காலடியில்...

தாயின் காலடியில் சொர்க்கம் உண்டு என்பது நபிகள் நாயகம் (ஸல்) சொன்ன பொன் மொழி.

தாயின் காலில் விழுந்து வணங்க வேண்டுமென்பது இதன் பொருளாகாது. மாறாக, தாயை மதித்து, அரவணைத்து, அன்பு காட்டி, தாய்க்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

நபிகளாரிடம் நண்பரொருவர் வந்தார். "இறைதூதரே! அறப் போரில் கலந்துகொள்ள விரும்புகிறேன். அது குறித்து தங்களிடம் ஆலோசிக்கவே வந்தேன்" என்றார். அப்போது நபிகளார், "உமக்கு அன்னை இருக்கிறாரா?" என வினவ, அவர் 'ஆம்' என்றார். அப்போதுதான். "தாயை (முதலில்) கவனி! சொர்க்கம் அவரது காலுக்கு அடியில் உண்டு" என்றார் நபி. (நஸயீ)



மனிதன் பிறப்பதற்கு, இறைவனுக்கு அடுத்து தாய்தான் காரணம். அவனை வயிற்றில் சுமந்து, பெற்றெடுத்து, பாலூட்டி, சீராட்டி வளர்த்து ஆளாக்குவதற்குள் தாய் படும்பாடு சொல்லி மாளாது. உலகத்தில் சுயநலமே கலக்காத ஒரு தியாகி உண்டென்றால், அது தாயாகவே இருக்க முடியும். தியாகத்தின் மொத்த உருவம் தாய்தான். அந்தத் தியாகச் சுடரை நீருற்றி அணைக்கலாமா?


இதனாலேயே இறைவன் தன் திருமறையில் இப்படிக் கூறுகின்றான்: பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு நாம் அறிவுறுத்தினோம். அவனை, அவன் தாய் சிரமத்துடனேயே சுமந்தாள் சிரமத்துடனேயே பெற்றெடுத்தாள். அவனை (வயிற்றில்) சுமப்பதற்கும் பால்குடி மறக்கவைப்பதற்கும் முப்பது மாதங்கள் பிடிக்கின்றன். **(46:15)**

தாய், தந்தையை எப்படி நடத்த வேண்டும் எப்படி நடத்தக் கூடாது என்பதை இறைவன் ஒரு வசனத்தில் தெளிவாகக் குறிப்பிடுகின்றான்:

பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும். அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ முதுமையடைந்த நிலையில் உம்மிடம் இருந்தால், அவர்களை நோக்கி, 'ச்சீ' என்றுகூடச் சொல்லிவிடாதீர் அவர்களை விரட்டாதீர் அவர்களிடம் கண்ணியமான சொல்லையே சொல்வீராக. பணிவு எனும் சிறகைக் கனிவுடன் அவர்களுக்காகத் தாழ்த்துவீராக! (17:23,24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பலியெடுக்கும் நுண்கடன்

■ நோக்கன்

நுண் கடன் முறையான அடிப்படையில் கொடுத்து வாங்கப்படுமாயின் ஒரு கிராமத்தை எழுச்சி பெற வைக்க அதை விடச் சிறந்த வழி வேறொன்றுமில்லை. ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் வலி சுமந்த சமூகத்தை முன்னேற்றுவோம் துயருண்ட மக்களை ஆற்றுப்படுத்துகிறோம் என்ற கோஷத்தோடு, அப்போது இருந்த ஆட்சியாளர்களின் அனுசரணையோடு பல நிதி நிறுவனங்கள் எமது பிராந்தியத்துக்குள் வந்து புகுந்தன. வந்தவைகளில் வங்கிகளிலும் பார்க்க லீசிங் கம்பனிகளே எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்பட்டன. பெரும் முதலீட்டோடும், பாரிய வளங்களோடும் இவை குடிபுகுந்து கொண்டன. இலங்கையில் வட மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் இருக்கின்ற நிதி நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்கடன் திட்டங்களினால் நலன் பெற்றவர்களைவிடத் துயரங்களை அனுபவித்தவர்கள்தான் அதிகம்.

நுண்கடன் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட சமயம் ஊர் அல்லோலகல்லோலப்பட்டுக் கிடந்தது. அப்போது அவர்கள் பணிக்கு அமர்த்திக் கொண்டவர்கள் எவ்வளவு தூரம் இந்தக் கடன் பற்றிய தாற்பரியத்தையும், அதிலிருக்கின்ற சமூகப் பொறுப்பைப் பற்றியும் அறிந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் சார்ந்த நிறுவனங்களும் அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கியிருப்பார்களா என்பதுவும் சந்தேகமே? கடனைக் கொடுக்கும் போது நிறுவனத்தைப் பாதுகாத்து அதனை எப்படி வழங்க வேண்டும் என்ற நடைமுறையையும் பின்பு மீளப்பெறும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் சொல்லிக் கொடுத்தவர்கள் அதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் எத்தகைய நீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.


பல இடங்களில் மிரட்டல்கள் விடப்பட்டிருக்கின்றன. வன்முறைகளை பிரயோகிக்க எத்தனித்திருக்கிறார்கள். ஒரு போராளிக் குடும்பத்தில் விதவையாகிப் போய்விட்ட தாயை அவர்களது பிள்ளையைக் கட்டித்துவதாகக்கூட மிரட்டி இருக்கிறார்கள். இடம்பாராமல் அவர்களை வன்சொற்களினால் வசைபாடியுள்ளார்கள். எனவே நுண்கடன் திட்டத்தில் அதன் தார்பரியத்தை உணராமலும், உணர்த்தாமலும், பொறுப்பற்ற முறையில் நிறுவனங்கள் நடந்து கொண்டதே இதற்குக் காரணம் எனலாம்.

நுண்கடன் என்ற நிதித் திட்டம் பெரும் சமூகச் சீரழிவுகளையும், தற்கொலைகளையும், குடும்பப் பிளவுகளையும் ஏற்படுத்தி உள்ளது. 2016 இல் 97 பேரும், 2017 இல் 116 பேரும் 2018 இல் இதுவரை 80 பேரும் நுண்கடன் தொல்லை தாங்காமல் தற்கொலை செய்துள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை நுண்கடன் என்ற விடயம் ஒரு சமூக விரோதச் செயலாகவே மக்களால் பார்க்கப்படுகிறது. அதன் பெயரிலேயே அதைப் பெறுபவரின் தலைவிதியும் நிர்ணயக்கப்பட்டிருப்பதாக ஒருவர் கூறினார். அது நுணுக்கமாகக் கையாளப்பட வேண்டிய கடன் என்றும், கண்களுக்குத் தெரியாத அரிய பல நுணுக்கமான பின்னூட்டங்களைக் கொண்டுள்ளதென்றும் அர்த்தப்படுத்தலாமோ? என்றும் அவர் என்னைக் கேட்டார்.

இத்தகைய நுண்கடன் முதலில் என்ன நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டது? சமூக முன்னேற்றத்திற்கும், மக்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கட்டுமே என்றுதானே இந்தக் கடனைக் கொடுக்கத் தொடங்கினீர்கள்? பின்னர் எப்படி இது சமூகத்திற்கு நஞ்சானது? இந்த நுண்கடன் திட்டத்தை மிகவும் சமூகப் பொறுப்போடு நடைமுறைப் படுத்துவோமானால் அதைவிடச் சிறந்த முறை வேறொன்றும் இருக்க முடியாது என்று கூறுகிறார் ஒரு ஓய்வுபெற்ற வங்கியாளர்.

நுண்கடன் பெற்று அவரவர் ஆற்றுகின்ற தொழில்கள் மூலம் சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள ஏழை எளிய மக்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் கணிசமாகச் சம்பாதித்து, சொந்தக் காலில் நிற்பதன் மூலம் ஏழ்மை, கல்லாமை, பெண்ணடிமை, சாதிய ஒடுக்குமுறை முதலான பிரச்சினைகளிலிருந்து விடுபடுகின்றனர். மேலும் தன்னம்பிக்கை, தொழில்முனைப்பு, குழு மனப்பான்மை, நிர்வாகத் திறன், கூட்டுறவு மற்றும் சமூக உணர்வுகள் வளர்த்தெடுக்கப் படுகின்றன - என்று முதலாளித்துவ அறிவுஜீவிகளும் தன்னார்வக் குழுக்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால், உண்மையோ நடைமுறையில் வேறாக இருக்கிறது.

நுண்கடன் பெற்றவர்கள் பலர் தம்மை மாய்த்துக் கொண்டுள்ளனர். பலர் அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை எனப் பித்துப் பிடித்ததைப்போல அலைந்து திரிகின்றனர். கடனை வசூலிக்க வருகின்ற இளைஞர்கள் அவர்களை அந்தச் சூழலிலிருந்து தங்களை விடுவிப்பதற்கு பாலியல் லஞ்சம் கோரியதாகவும் கதைகள் உண்டு.




என்று ...
அப்பெ...
இத்...
நிறுவன...
சூறைய...
கதவை ...
எண்ண...
கிராமப்...
கோடி...
நிதி நிவ...
நடவடி...
மேற்செ...
ஏற்படுத்...
நுண்...
நடைமு...
என்ற ...
நுண்கட...
நேர்முக...
எதற்கா...
உண்மை...
முயற்சி...
போகிற...
பூர்த்தி ...
என்பன...
நுண்கட...
தவறிப் ...
ஆடம்ப...
பெற்றி...
இது ...
என்றன...
பொறு...
ஒரு நிதி...
கொடுக்...
மீளச் ...
செய்து ...
அறிவு...
அதைவ...
வார்த்து...
முறைன...
கடனை...
கடன்...
வாள் ...
நிறுவன...
குற்றச்...
அடு...
நிறுவன...
படுத்து...
உள்ளிர...
வீடாக...
விதியே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடனைக் கொடுக்க முன்பு அக்கா..அக்கா என அன்போடு அழைத்துக் கொண்டு பல தடவை அவள் வீட்டுக்கு வந்து போன இளைஞன் அந்தப் பெண் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த நாதியற்று நின்றபோது அவளை பெண் என்றும் பாராமல் விளித்த தமிழ் சொற்களுக்கு தமிழ் அகராதியில் இன்றுவரை அர்த்தத்தைத் தேடுகிறேன். காணமுடியவில்லை. கடனைக் கொடுத்தபோது அவளிடம் பெற்றுக் கொண்ட கையொப்பத் திற்கு அளவே இல்லை என்று அவள் ஆதங்கப்படு கிறாள். கடன் பெறும் போது தான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் "அது ஒண்டும் இல்லை. ஏதேன் வந்தால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அந்த இளைஞன் கூறினான் என அப்பெண் சொன்னார்.

இத்தகைய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் பகற் கொள்ளைக்கும் சூறையாடலுக்கும் ஆட்சி செய்பவர்கள் கதவை அகலத் திறந்துவிட்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகிறது. இது போதாதென்று கிராமப்புற நுண்கடன் திட்டங்கள் மூலம் கோடிகோடியாய்க் கொள்ளையடிக்கின்ற நிதி நிவனங்களைக் கட்டுப்படுத்த எதுவித நடவடிக்கையையும் அரசு இதுவரை மேற்கொள்ளாதிருப்பது சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது.

நுண்கடன் கொடுப்பதில் உரிய நடைமுறைகளைப் பேணுகிறார்களா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில். நுண்கடனுக்காக வருபவர்களை முதலில் நேர்முகம் காண வேண்டும். அவர் ஏன்? எதற்காக நுண்கடனைப் பெறுகிறார் என்றும், உண்மையிலேயே தனது சுயதொழில் முயற்சிலேயேதான் முதலீடு செய்யப் போகிறாரா? இல்லாவிடில் பிற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருகிறாரா? என்பதை அடையாளம் காண வேண்டும். நுண்கடன் பெற்றுத் திருப்பச் செலுத்தத் தவறிப் போகின்றவர்களை சந்தித்தபோது ஆடம்பரச் செலவுகளுக்காகவே பலர் கடன் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

இது கடன் பெற்றவரது தவறு என்றதைவிடக் கடன் கொடுத்த அதிகாரியின் பொறுப்பற்ற தன்மையையும் காட்டுகிறது. ஒரு நிதி நிறுவனமானது கடனைக் கொடுக்கும்போது அந்தக் கடனைப் பெறுபவர் மீளச் செலுத்துவதற்கு எத்தகைய ஒழுங்குகளைச் செய்து வைத்திருப்பார் என்றதையும் அறிவது மிகவும் முக்கியமானதாகும். அதைவிட்டு "கையைப் பிடிச்சுக் கள்ளை வார்த்து மயிரைப் பிடித்துக் காசு வாங்குகிற" முறைமையையே கையாண்டிருக்கின்றனர். கடனைச் செலுத்தாதவர்களை பயமுறுத்திக் கடன்பெற்ற காசை திரும்பிப் பெற வாள் வெட்டுக் குழுக்களையும் சில நிதி நிறுவனங்கள் பயன்படுத்திக் கொண்டதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு.

அடுத்ததாக நுண்கடன் கொடுக்கும் நிதி நிறுவனங்கள் தமது தயாரிப்புகளைச் சந்தைப் படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு உள்ளிறங்கிக் கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதிலும் ஒரு பின்னோக்கமுண்டு என்று ஒரு உளவியலாளர் கூறினார். அவர்கள் எப்போதும் பெண்களையே இலக்கு வைத்துத் தமது நோக்கங் களை நிறைவேற்றுகிறார்கள். இத்தகைய தொழிற்பாடுகள் காலை 9-10மணிக்குப் பின்னரே நடைபெறுகிறது. அப்போது வீடுகளில் ஆண்கள் இருக்க மாட்டார்கள். தனிமையாக இருக்கின்ற பெண்களுக்கு மூளைச் சலவை செய்து பல நன்மைகள் இருப்பதாக ஒரு மாயையை ஏற்படுத்துவார்கள். ஈற்றில் பார்த்தால் நிறுவனங்கள் இதில் வெற்றி பெறுவது தெரியும். யாழ்ப்பாணத்தில் இருக்கும் நிதி நிறுவனங்களைச் சென்று பார்த்தால் அங்கு பணிபுரிகின்றவர்கள் எவ்வளவு ஆடம்பரமுள்ளவர்களாகவும், ஊதியமாகப் பெருந்தொகையைப் பெறுதையும் காணலாம்.

தேசிய ஊரக மற்றும் விவசாய வளர்ச்சி வங்கி - இந்தியாவின் கூற்றுப்படி, "நுண்நிதி என்பது கிராமப்புற நகர்ப்புற ஏழை மக்களுக்குச் சிறு அளவில் சேமிப்பு, கடன் மற்றும் இதர நிதிச் சேவைகளை வங்கிகள் நிதி நிறுவனங்கள் மூலம் அளித்து, அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதாகும். நுண்நிதிச் சேவைகளான சேமிப்பு, கடன் மற்றும் இதர நிதிச் சேவைகளைச் சுய உதவிக் குழுக்களுக்கு நுண்நிதி நிறுவனங்கள் மூலம் வங்கிகள் அளிக்கும்." என இந்தியாவிலே ஒரு நடைமுறை இருப்பதாக இணையக் குறிப்பு ஒன்று சொல்லுகிறது.

இந்தியாவிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண்நிதி நிறுவனங்களில் ஆகப் பெரும்பாலானவை தன்னார்வக் குழுக்களால் நடத்தப் படுகின்றன. பாதுகாவலர்களாக கணிசமான சேமிப்பைப் பெற்றிருக்கும் சுய உதவிக் குழுக்களை அடையாளம் கண்டு, அக்குழுக்களுக்கு நுண்நிதிச் சேவைகளை இத்தன்னார்வக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருகின்றன. மேலும், வங்கிகளுக்கும் சுயஉதவிக் குழுக்களுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல் விவகாரங்களைக் கண்காணித்து ஒருங்கிணைக்கும் வேலைகளையும் அவைகள் செய்கின்றன.

ஆனால் இலங்கையில் நுண்கடன் வெற்றிபெறாமல் போனதற்கும், அது ஒரு சமூக எழுச்சியை ஏறபடுத்தத் தவறிவிட்டமைக்கும் நுண்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த என்று வந்த நிதி நிறுவனங்களுக்கு அது பற்றிய கல்வி மற்றும் அனுபவ அறிவு என்பன போதாது என்று கருதமுடியும். அத்துடன் உண்மையிலே அப்போதிருந்த ஆட்சியாளர்களும் மிகவும் அராஜகப் போக்குள்ளவர்களாகவும், இத்தகைய நிதி நிறுவனங்களின் முதலீட்டின் பின்னணிகளை அவர்கள் அல்லது அவர்கள் சார்ந்தவர்கள் கொண்டிருந்ததுமே காரணம் எனலாம்.

உண்மையிலேயே வடக்கிலும், கிழக்கிலும் திறக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் ஒரு சமூகத்தைச் சிதைக்கவென ஏவப்பட்ட கணைகள் எனவும் பார்க்கலாம். அவை கொண்ட நடைமுறைகளும் அதனையே உணர்த்துகின்றன. பார்க்கப்போனால் இத்தனை தொகை மக்களுக்கு இத்தனை வங்கிகள் ஏன்? அத்தனை லீசிங் கம்பெனிகள் ஏன்? இத்தனை நிதி நிறுவனங்கள் ஏன்? ஒரு வங்கியாளரைத் தொடர்பு கொண்டு இது பற்றிக் கேட்டோம். "நீங்கள் கிராமங்கள்தோறும் வீடு வரை சென்று உங்கள் நகைகளை எம்மிடம் அடகு வையுங்கள். என்று கடன்படச் செய்வதை ஏன் நீங்கள் செய்யும் ஒரு சமூகத் துரோகம் என்று பார்க்க முடியாது - என்று கேட்டேன். என்ன செய்வது? நிதி நிறுவனங்களுக்கிடையே நிலவுகின்ற போட்டிதான் அதற்குக் காரணம். - என்று அவர் பதிலளித்தார். அப்போது பணம் விழுங்கும் இவ்வாறான முதலைகளின் போட்டிக்குப் பலியாவது அப்பாவி மக்களா?

# நுண்கடன் என்றால் என்ன?

நுண்கடன் என்பது சிறிய - குறுகிய கடன் எனப் பொருள்படும். பொருளாதார நிலையில் அடிமட்டத்தில் இருப்பவர்களின் முன்னேற்றும் - விருத்தி செய்யும் நோக்கில் தனியார் அல்லது அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள் வழங்கும். கடன் பெறுநர்கள் கல்வி அறிவு உடையவர்களாக இருக்க வேண்டும் என்றோ அடமானமாக அசையும் அசையா சொத்துகளை வைக்க வேண்டும் என்ற அவசியமோ நுண்கடனுக்கு இல்லை.

**நுண்கடன் வரலாறு**

ஐரிஸ் நாட்டில் 1830 ஆம் ஆண்டில் லியாண்டர் ஸ்பூன்சர் என்பவர் நுண்கடன் முறைமையை அறிமுகப்படுத்தினார். வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த மூலோபாயமாகக் கண்ட ஐரிஸ் அரசாங்கம் தேசிய வறுமை ஒழிப்புக்கான உபாயமாகக் கைக் கொண்டது. சிறந்த முறையில் இயங்கியதன் மூலம் வறுமை ஒழிப்பிலும் வெற்றி கண்டது ஐரிஸ்.

**கிராமின் வங்கி**

நம் நாட்டை விடப் பல மடங்கு வறுமைப்பட்டவர்களைக் கொண்ட தேசம் பங்காளதேஷ். வறுமையை ஒழிக்க பொருளாதாரப் பேராசிரியர் முஹமது யூனுஸ் முதலில் தன் கிராமத்தில் பிரம்புக் கூடை பின்னி விற்கும் பெண் ஒருவருக்கு ஒரு தொகையை நுண்கடனாக வழங்கினார். வாரா வாரம் அப்பெண்ணிடம் பணத்தைப் பெற்றதுடன் அவருக்குத் தேவையான ஆலோசனைகளையும் யூனுஸ் வழங்கினார். இதைத் தொடர்ந்து 1974 இல் 42 பெண்களுக்கு கடன் வழங்கினார். அதுவரை கந்துவட்டிக்கு பணம் வாங்கி வட்டியைக் கட்ட முடியாது தவித்தவர்களுக்கு நுண்கடன் முறை நன்மை பயத்தது.

இதைத் தொடர்ந்து கிராமின் வங்கியை நிறுவினார் யூனுஸ். இன்று 82 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் நுண்கடனை வழங்கி வருகிறது கிராமின் வங்கி. 84 இலட்சம் பேர் கடனைப் பெறுகின்றனர். இவர்களில் 97 வீதமானோர் பெண்களாவர். கடன் பெறுநர்களில் 99.6 வீதமானோர் கடன்களை மீள செலுத்துகின்றனர். (தரவு 2017 - கிராமின் வங்கி)

**இலங்கையில்...!**

இலங்கையில் நுண்கடன் திட்டம் 40 வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளது. ஆனாலும் அரச தொழிலில் இருப்பவர்கள் பிணையளிக்க வேண்டும் என்ற நிபந்தனை ஆரம்பத்தில் இருந்தது. யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கில் தென்னிலங்கை நிதி நிறுவனங்கள் கிளைகளைத் திறக்கவில்லை. 2009 இன் பிற்பாடு வடக்கு, கிழக்கில் சுமார் 15 தொடக்கம் 18 வரையான நிறுவனங்கள் கிளைகளைத் திறந்தன. போட்டி காரணமாக பல தளர்வுகளை ஏற்படுத்தி - வரம்புகளை மீறி நுண்கடன்களை இந்நிறுவனங்கள் வழங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் தாகம்


■ ஆனந்தன்

பங்குனி மாதம் வெயில் மிகவும் காய்தலாக அடித்துக்கொண்டிருந்தது. றோட்டில் அவ்வளவு நடமாட்டமில்லை. தூரத்தில் மாத்திரம் ஒருவன் குடை பிடித்துக் கொண்டு வியர்க்க விறுவிறுக்கத் தார் றோட்டில் அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்தான். அதற்கப்பால் ஒரு கட்டைவண்டி 'கடா கடா' என்று ஆடி ஆடி வந்து கொண்டிருந்தது. பன்னிரண்டு மணி வெளியே யாரும் தலை காட்டவில்லை. பகல் முழுவதும் வெயிலிலே திரியும் நாய்கூட சுவரோத்தில் கிடந்த சிறு நிழலில் இளைத்துக் கொண்டிருந்தது. அவ்வளவு உக்கிரமான வெயில், பலர் பகலுறக்கம் போட்டார்கள். சிலர் புழுக்கம் தாளாமல் தவித்தார்கள். செட்டியார் புதினப் பத்திரிகையோடு தூங்கி வழிந்துகொண்டிருந்தார்.

அந்த அரசமரத்தின் கீழ்த்தான் பகல் முழுவதும் மீனாட்சிக்கு வேலை. நியாயஸ்தலத்துக்குப் போகும் கிளைறோட்டும் பெரிய தெருவும் கோணமாய்ச் சந்திக்கும் சந்தி அது. அந்த அரச மரத்தைச் சுற்றி வெயில் கடுமைக்கும் உகந்த குளிர்நிழல், தட்டுச் சுளகிலே சின்னச் சின்னக் கூறாகக் கத்தரிக்காய், பிஞ்சு மிளாகாய் நன்றாக அடுக்கிப் பக்குவமாக வைக்கப்பட்டிருந்தன. அவளுக்குச் சோம்பேறித்தனமோ கொட்டாவியோ இல்லை. அன்றைக்கு வியாபாரம் அவ்வளவு ருசியாகவில்லை. கோடு கலைந்ததும் பள்ளிக்கூடம் விட்டதும்தான் வியாபாரத்தின் ருசி தெரியும். கொண்டுவந்த பெட்டியை காலி செய்து விட்டே, வீடு திரும்புவாள். அப்பொழுது அவள் உள்ளத்தில் எழுவது ஆனந்தக்கடல்தான்.

தலையைக் கோதிக்கொண்டே பள்ளமான அடியிற் சாய்ந்தாள். அரசமிலைகளை இடையிடையே அசைக்கும் காற்று அவள் கூந்தலையும் ஆட்டிக்கொண்டிருந்தது. ஒரு காகம் மாத்திரம் கொப்பிலே இருந்து பலத்த தொனி வைத்தது. அவளைப் பார்த்தால் யாருமே இழிகுலத்தவள் என்று சொல்ல மாட்டார்கள். அவளுடைய சிவந்த மேனியும் கருவண்டுக் கண்களும் யாரையும் கொள்ளை கொண்டுவிடும். அவள் ஜாதியைப் பற்றி யாருமே கேட்டதில்லை. அப்படி அவர்கள் அறிந்திருந்தால் எப்பவோ அவள் வியாபாரத்தில் மண் விழுந்திருக்கும். ஊரார் மாத்திரம் அவளிடம் எதுவும் வாங்குவதில்லை. அவர்களுக்குத் தான் விசயம் தெரியுமே?

வெயில் எரிய எரிய அவளுக்குத் தாகம் எடுக்கத் தொடங்கியது. பொறுத்துப் பார்த்தாள். நா வறளத் தொடங்கியது. இனி அவளால் சகிக்க முடியாது மெதுவாக அவற்றைப் பெட்டியிலே போட்டுக்கொண்டு கிளம்பினாள். பக்கத்தில் வீடுகளில்லை. அவையெல்லாம் காய்கறி விளையும் பூமியும் பற்றைக்காடுகளுந்தான்.



செழித்த கமுகுகளும் வாழைகளும் அங்கே கிணறு இருக்க வேண்டுமென்பதை ருசுப்படுத்தின. மெல்ல மெல்ல வீட்டின் அருகே வந்தாள். தெருவழியே ஓடிய சேற்றுத் தண்ணீர் இன்னும் அந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. உள்ளே பெட்டியை வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தாள் யாரையும் காணவில்லை.

கிணற்றைக் காணக்காண மேலும் தாகம் அவளை வாட்டியது. அடிநாவிலே சொட்டு ஜலமில்லால் வறண்டு போயிற்று. அந்த வெயிலின் அகோரத்திற்கு யாருக்குத்தான் தாகமில்லை!

கிணற்றுக் கட்டிலே விளக்கி வைத்த செம்பிலே நிறைய குளிர்ந்த ஜலத்தைக் காண அவள் உள்ளமும், வாயும் அதிலே ஆழ்ந்துபோயிற்று, பாவம் அந்த விடாயை அடக்க இன்னொரு விடாய் உதவியாய் இருந்தது. தான் அந்த விடாயைத் தீர்க்க அருகதையற்றவள் என்பதை அவள் அறிவாள். இழிகுலத்தில் பிறந்த பெண்கள் எல்லாம் தாகசாந்தி செய்யக்கூடாது என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார் என்பது அவள் அபிப்பிராயம். அந்தச் செம்பை மாறி மாறிப்பார்த்தாள். யாரையும் காணவில்லை.

'என்னடி செய்தாய் பாதகி' என்று மிரட்டல் கேட்டது அதிகார தோரணையில்.

ஏங்கி விலவிலத்துப் போனாள் மீனாட்சி, உடம்பு சொட்ட வியர்த்தது. நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. கண்கள் மிரள மிரள விழித்தன. அவள் தான் செய்த களவு பிடிபட்டதை எண்ணிக் கல்லாய் சமைந்து போனாள்.

'உனக்கு அவ்வளவு மமதையா பறைச் சிறுக்கி" என்று ஆத்திரத்தோடு ஓடி வந்தார் நடேசய்யர். விபூதியைப் பொத்திக்கொண்டே கைகள் ஆத்திரத்தால் அங்குமிங்கும் எதையோ தேடின. கோபாக்கினி கண்களிலிருந்து பறந்தது.

'அவ்வளவு நெஞ்சுத் துணிவு, கிணற்றுக்குக் கிட்ட வந்து செம்பு ஜலத்திலும் தொட்டுவிட்டாயே? அனுஷ்டான ஜலத்தில் தொட உனக்கு அவ்வளவு தைரியம் வந்து விட்டது' பல்லைக் கடித்து ஆத்திரத்தோடு அவளை விழுங்கப்போனார். பாவம் பறைப் பெண் அல்லவா? கோயிலுக்குப் போனால் எப்படிப் பிராயச்சித்தம் செய்வது என்று விட்டுவிட்டார் போலும்.

'மூதேவி நாயே, இனி என்னுடைய கிணற்றை நான் என்ன செய்வது? அனுஷ்டான பாத்திரத்தை வைத்துவிட்டு விபூதி எடுத்து வருவதற்கிடையில் இப்படிச் செய்துவிட்டாயா? இனி இந்தச் செம்பை...! நீ அந்தக் கதிரவன் மகளல்லவா? என்னுடைய அனுஷ்டான ஜலத்தைத் தொட்ட நீ கொள்ளையிலே போகமாட்டாயா? சிவன் வதைக்க மாட்டானா?'

ஒரு மின்னல் மன்னியது போல் இருந்தது. உலகமே இருண்டு மடமடத்து அவள் தலையில் கவிழ்ந்தது போல் இருந்தது. பூமியே அவள் கால்களிலிருந்து நழுவி விட்டது. இரத்தம் நெற்றியிலிருந்து குபீரிட்டது. களங்கமற்ற பார்வைக் கண்ணீரோடு இரத்தமும் சேர்ந்து ஓடியது. செம்பு அலங்கோலமாய் உருண்டு போய்விட்டது. அது அவள் கனிவாயை பற்றப்போய்த் தோல்வியடைந்ததற்காக அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

'மூதேவி, இனி இந்தப் பக்கம் தலைகாட்டு, உன் தலையை நுள்ளி எடுத்துவிடுகிறேனோ இல்லையோ பார், உனக்கு இது போதாது போ நாயே வெளியே, சனியன்கள் வீட்டில் வந்து கூசாமற் கால் வைக்குதுகள்'

தங்கச்சிலைபோல இவ்வளவும் நின்ற உருவம் இரத்த ஆற்றோடு பெயரத் தொடங்கியது. பெட்டியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு மெதுவாக வெளியே போய்விட்டாள். அவர் எறிந்தபோது வாய்ச்செம்பு அவள் நெற்றியில் நன்றாகக் கணீரிட்டுவிட்டது. தீண்டாமை அசுரனின் அசுரத்தன்மை அவள் பிறைநுதலில் இரத்தத்தை வாங்கி விட்டது.

பாவம் தாகவிடாய் தீர்ந்தபாடில்லை. களவுக்கேற்ற தண்டனை கிடைத்து விட்டதல்லவா? ஒரு பிராமணனின் அனுஷ்டானப் பாத்திரத்தைத் தொட்டு விட்டாளல்லவா? எவ்வளவு பொல்லாத கோரக்களவு, இதற்கு இந்தத் தண்டமை போதுமா? சிவனுடைய அனுஷ்டானத்தை முடிக்க விடாமல் தண்ணீரைத் தொட்டு தீட்டாக்கியவளல்லவா? பெண்ணைத்திட்டிய திட்டுக்களைப் பார்த்துப் பகவான் சிரித்துக் கொண்டிருந்தார். 'என் பிள்ளையின் கடூர நா வறட்சியைத் தணிக்காத உனக்கு என்மீது அன்பா? உன்னுடைய அனுஷ்டானம் கொடிய நரகிற்கு வாயிலல்லவா' என்று அழுகையோடுதான் அவர் சிரித்துக் கொண்டிருந்தார்.

சந்திரனுக்கும் இவள் முகத்திற்கும் நெடுங்காலம் ஓர் வித்தியாசம். அது இன்றோடு பூர்த்தியாகிவிட்டது. அவள் மதிவதனத்திலும் மறு ஏற்பட்டுவிட்டது.

ஏழையின் தண்ணீர் விடாய் என்றுதான் திருமோ?


• • •


நடுநிசி, எங்கும் ஒரே நிசப்தம், ஆனால் அறைகளில் இருமும் சப்தமும் குழந்தைகளின் கீச்சுக்குரலும் இன்னும் ஒழிந்தபாடில்லை. 'ஐயோ அம்மா' என்று அடுத்த அறைகளில் வியாதிக்காரர் கஷ்டப்படப்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. குழந்தைகளைத் தாலாட்டும் தாய்மாரின் பல தினுசான குரல், அங்கங்கே மின்சார விளக்குகள் தூங்கிக்கொண்டிருந்தன.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரத்தில் பறக்கிறார் ஜனாதிபதி





பேபி டிரம்ப் அந்தரத்தில் பலூனாகப் பறக்க மேலிடம் பச்சைக் கொடி காட்டியிருக்கின்றது. ஊதிப் பெருப்பிக்கக்கூடிய இந்த 6 அடி உயரமான பேபி டிரம்பை உருவாக்க 16,000 பவுண்ட்ஸ் (சுமாராக 32 இலட்சம் ரூபாய்) செலவிட்டுள்ளார்கள். டிரம்பின் லண்டன் பயணத்தின்போதே இந்தப் பறக்கவிடப்படுகின்றது.

பிரிட்டன் நாடாளுமன்றச் சதுக்கத் தோட்டத்திலிருந்து மேலெழும்பும் இந்த பலூன் 30 மீற்றர் உயரத்திற்கு மேல் பறக்கக்கூடாது. காலை 9.30க்கும் 10.30க்கும் இடைப்பட்ட நேரத்தில் மட்டுமே பறக்க விடலாம். லண்டன் நகரபிதா இந்த பலூனைப் பறக்க விடுவதற்கும், அமைதியாக ஊர்வலத்தை நடத்துவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

10,000 இற்கும் மேற்பட்டவர்கள், இந்த பேபி டிரம்ப் பலூன் விடயத்தை அனுமதிக்கக் கோரி, லண்டன் நகர பிதாவுக்கு கையொப்பமிட்டு கூட்டுக் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்கள் இந்தப் பலூனைச் செய்வதற்கான செலவையும் கையொப்பமிட்டவர்களே பொறுப்பேற்றிருந்தார்கள்.

## 44 வருடத் தண்டம்

1974 ஆம் ஆண்டில் கட்டப்பட வேண்டிய தண்டம், 2018இல் ஒருவரால் கட்டப்பட்டுள்ளது. அதாவது 44 வருடங்கள் கழித்து, இந்தத் தண்டப் பணம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சென்றடைந்திருக்கின்றது.

அது என்ன குற்றம்.?


வாகனம் நிறுத்தத் தடை விதிக்கப்பட்ட இடத்தில், வாகனத்தை நிறுத்தியதுதான் குற்றம். கட்டப்பட வேண்டிய தொகை சமாராக 400 ரூபாய்! அமெரிக்காவின் பென்ஸில்வேனியா என்ற இடத்தில்தான் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

1000 ரூபாய் பணத்தை இணைத்து, ஒரு கடிதத்தையும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு சமர்ப்பித்துள்ளார் இந்த அநாமதேயப் பேர்வழி!

"நான் இந்த ரிக்கெற்றை கடந்த 40 வருடங்களாக என் கூடவே கொண்டு திரிகிறேன். இந்தத் தண்டப் பணத்தை கட்டிவிட வேண்டும் என்ற நினைப்பே எப்பொழுதும் இருந்தது. ஆனால் நான் பணத்தை இன்றுவரை கட்டவில்லை. மன்னிக்கவும். என்னைப் பற்றிய விபரங்களை மீண்டும் தராதமைக்காக என்னை மன்னிக்கவும்"-இப்படி அவர் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

ஒரு ரிக்கெற்றை இவ்வளவு காலம் வைத்திருந்தோடு, தண்டப்பணத்தையும் காலங்கடந்து கட்டியிருப்பது, அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

எப்படியும் வாழலாம் என நினைக்கும் மனிதர்களில், இப்படியும் வாழலாம் என்று நினைக்கும் மனிதர் இவர்!




# 72 மாத சீஸ்பேர்கர் விற்பனைக்கு!


இன்று உலகப் புகழ் பெற்று விட்ட அவசர உணவான சீஸ்பேர்கரைப் பற்றி உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. அந்த சீஸ்பேகரை கடையில் வாங்கி, சாப்பிடாமல் 6 வருடங்கள் வைத்திருந்த புதுமையான ஆசாமியின் கதைதான் இது!

ஆறு வருடங்கள் சீஸ்பேர்கரையும், அதனுடன் கிடைத்த சிப்ஸையும் பத்திரமாக வைத்திருப்பதே ஒரு தனிக் கதை. இந்தக் கதையையும் மீறி, அதை இணையத்தளத்தில் இவர் விற்க முயற்சித்திருப்பது, மாபெரும் கோமாளித்தனம். காலங்கடந்த பழைய காலத்துப் பொருட்கள்(முத்திரைகள் போன்றவை) பெரிய விலையில் விற்பனையாவது சகஜம்தான். ஆனால் இந்தக் கனடியரோ உடனே சாப்பிட வேண்டிய ஒன்றை பத்திரமாக 72 மாதங்கள் வைத்திருந்து விட்டு, இப்பொழுது அதையே விற்கும் வியாபாரியாக மாறியிருக்கிறார்.

தன் மகளைக் கொண்டு 2012 ஜூன் மாதம் 6 ஆம் திகதி இதை வாங்கியதாகவும், மக்டொனால்ட்ஸ் உணவு கெடாது என்பது வெறும் வதந்திதானா என்பதை அறிய விரும்பியதாகவும் இவர் கூறியிருக்கின்றார். தான் வீட்டில் செய்த பேர்கர் 5 வருடங்களுக்கு முன்பு இதற்குப் பக்கத்தில் வைக்கப் பட்டதாகவும், அது கெட்டு எறியப்பட்டு விட்டது என்றும் இவர் குறிப்பிட்டிருப்பது பலரை ஆச்சரியப் பட வைத்துள்ளது. இதை யார் வாங்கப் போகிறார்கள் என்று நீங்கள் எள்ளி நகையாடக் கூடும்.

சற்றுப் பொறுங்கள். 22.91 டொலர் என்ற அடிமட்ட விலையிலிருந்து, 62.65 டொலர் வரை (சுமாராக 16500 ரூபா) விலை எகிறிக் குதித்திருக்கின்றது. விற்பனைக்கான கடைசி நாளில் இது 20,000 ரூபாவாக மாறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வைத்தியக்கார உலகம் என்கிறீர்களா?



## புதினப் பூங்கா



# குடிகார கடல் பறவைகள்

இங்கிலாந்தின் தென் மேற்குப் பிராந்தியத்திலிருந்து வந்து தரையிறங்கியுள்ள கடற்பறவைகள், அதிகாரிகளை நிலைகுலைய வைத்துள்ளன. என்னதான் காரணம்? போதையில் பறந்து வந்து தள்ளாட்டத்தோடு குழம்பி நின்ற இந்தப் பறவைகள். அதிகாரிகளையும் குழம்ப வைத்துவிட்டன.

சில பறவைகள் இறந்துள்ளன. வேறு சில மரணப் படுக்கையில் இருக்கின்றன. இது எப்படிச் சாத்தியமாகும் என்று ஆராய்ந்ததில், எங்கோ ஒரு மதுபான உற்பத்தியாளர் கழித்த பொருட்களை இந்த அப்பாவிப் பறவைகள் சுவைத்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுக்க ஆரம்பித்துள்ளது.

நிற்க முடியாமல் தள்ளாடினவாம் சில பறவைகள். மனிதர்களைப் போலவே, போதையில் தள்ளாடும் ஒரு பறவையை வீடியோப் படமெடுத்து வைத்துள்ளோம் என்கிறார் ஒரு அதிகாரி. மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, தகுந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதில், பல பறவைகளை மரணத்திலிருந்து மீட்டுள்ளார்கள். பின்பு இவை சுயாதீனமாகப் பறக்க விடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைபேசிகள் மழைக்காடுகளின் காவலன்



டெம்பே போராளி

அந்தக் கரும்பலகையில் இரண்டு மரங்கள், நான்கு துண்டுகளாக வரையப்பட்டிருந்தன. அதாவது, ஒரு மரம் இரண்டாக வெட்டப்பட்டிருந்தது. இன்னும் கொஞ்சம் தள்ளி மான்கள், சிறுத்தைகள் வரையப்பட்டிருந்தன. குழந்தைகளுக்கு அது காடு என்பது புரியும். அந்த ஆசிரியை அவர்களின் மொழியில் கேட்கிறார்...

"இது நம் காடுதானே?"

"ஓம்..."



கைபேசிகளை மரங்களுடன் இணைக்கிறார் டெம்பர் வைற்



மரம் வெட்டியவர்களை பிடித்து விசாரிக்கும் டெம்பே போராளிகள்

"இப்படி இந்த மரங்களை வெட்டி, திருட்டுத்தனமா எடுத்துப் போறது சரியா?"

"இல்லை...தப்பு...தப்பு..." பல குழந்தைகளும் தலைகளை ஆட்டி பதில் சொல்கின்றனர்.

"இப்படி மரங்களை வெட்டினால் என்ன நடக்கும்?"

"எமக்குப் பழங்கள் கிடைக்காது." ஒரு சிறுமி.

"மான்களுக்கும், சிறுத்தைகளுக்கும் வீடு இருக்காது."

"மழை வராது."

"சாமி அழும்."

"மரம் பாவம். செத்துப் போயிடும்."

இப்படியாகப் பல பதில்கள். ஆனால், ஒவ்வொரு பதிலும் அந்தக் குழந்தைகளுக்கு, அந்தக் காட்டின் மீதிருக்கும் காதலை வெளிப்படுத்தும் விதமாக இருந்தன. ஈரம் நிறைந்திருக்கும் பிரேசிலின் மழைக்காடுகள் அவை. பிரேசிலின் "பாரா" (Para) மாநிலத்திலிருக்கும் "அல்ட்டோ ரியோ குவாமா பூர்வகுடி நிலப்பகுதி" (Alto Rio Guama Indigenous Land). 2014 இற்கு முன்னர் வரை தங்கள் வனங்களைப் பாதுகாக்க மிகப் பெரிய போராட்டங்களை நடத்தியது இந்த மண்ணின் பூர்வகுடி இனம் "டெம்பே" (Tembe).

"டெம்பே"வின் குழந்தைகள் சொல்லும் பதில்கள் எதுவும் பாடசாலை பாடப் புத்தகங்களில் சொல்லிக் கொடுக்கப்பட்டவை அல்ல. அது தலைமுறை, தலைமுறையாக அவர்களின் மரபணுக்களிலேயே கடத்தப்பட்ட பாடம். காட்டின் தரையிலிருந்து தலைநிமிர்ந்துப் பார்த்தால், வானத்தைப் பார்ப்பது சற்று கடினம்தான். சமயங்களில்... வானம் பச்சை நிறம் பூண்டிருப்பதாகக் கூடத் தோன்றலாம். ஒவ்வொரு மரமும் அத்தனை உயரம். ஒவ்வொரு மரமும் அத்தனை அகலம். "டெம்பே"வுக்கு அது கடவுள். அந்தக் காட்டைத் தவிர அவர்களுக்கு வாழ்வில் எது ஒன்றும் பெரிது கிடையாது.

"டெம்பே" அல்லாத மற்றவர் அனைவருக்கும் அது பணம், டொலர்கள். கொட்டிக் கொடுக்கும் புதையல். அரசின் பக்கம் கை நீட்டுபவர்களுக்குக் கையூட்டுகளைக் கொடுத்து, அந்த மரங்களை வெட்டி உலகின் பல நாடுகளுக்குக் கொண்டு சேர்க்க அங்கு மிகப்பெரிய கொலை, கொள்ளை கும்பல் உண்டு. அவர்களை எதிர்த்துப் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள் "டெம்பே".

"டெம்பே"வின் நிலத்தில் ஒரு பக்கம் மிகப்பெரிய ஆக்கிரமிப்புகள் நிகழ்ந்தன. குறிப்பாக, "மெஜெர் ராஞ்ச்" (Mejer Ranch) எனும் பண்ணை பெரியளவிலான நிலத்தை ஆக்கிரமித்திருந்தது. அதற்கு எதிராக 40 ஆண்டுகளுக்கும் மேலாகச் சட்ட ரீதியிலும், அறப் போராட்டங்களின் வழியாகவும் இன்னும் பல வழிகளிலுமாக "டெம்பே" மக்கள் போராடினர். இறுதியாக, 2014ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பண்ணையை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த மாலை நேரம், சிவப்பு நிற பழத்தைப் பிழிந்து அந்தச் சாற்றை அவர்களின் முகத்தில் பூசிவிடுகிறார் அந்தப் பெண். கிழிந்த ஜீன்ஸ், அங்கங்கு ஓட்டையாகிப் போயிருக்கும் சட்டை...சிலர் சட்டை போடாமல் வெறும் உடம்பில் இருந்தனர். தலையைச் சுற்றி, சிவப்பு நிற பட்டை ஒன்று. அது ஏதோ பறவையின் இறகால் செய்யப்பட்டிருப்பது போலிருந்தது. அப்படியாக ஒரு 30 பேர் இருக்கிறார்கள். அவர்களை "டெம்பே போராளிகள்" (Tembe Warriors) என்றழைக்கிறார்கள்.

ஒரு பழைய லொறி வந்து நிற்கிறது. ஒவ்வொருவரும் துப்பாக்கிகளோடு அதில் ஏறுகிறார்கள். ஒரு பெண்ணும் அந்த வண்டியில் ஏறுகிறார். அவர் தன் பையில் நிறைய தோட்டக்களை வைத்திருக்கிறார். அதை ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கிறார். அவர்கள் அந்தக் காட்டுப் பகுதியைச் சுற்றி வருகிறார்கள். அங்கு சில வண்டிகளின் தடங்கள் இருப்பதைப் பார்க்கிறார்கள். அது புதிய தடம். நேற்று அது அங்கில்லை.

தங்களின் வண்டியை நிறுத்துகிறார்கள். இறங்கி மெதுவாக நடக்கிறார்கள். சில சத்தங்களைக் கூர்ந்து கேட்டு அதை நோக்கிப் போகிறார்கள். அங்கு 6 பேர் இருக்கிறார்கள். வெட்டப்பட்ட மரத்தை அறுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு டிராக்டர் நின்று கொண்டிருக்கிறது. அவ்வளவு பேரையும் சுற்றி வளைக்கிறார்கள்.

அந்தப் பெண், முன் வருகிறார்.

"நீங்களும் மனிதர்கள்தானே... உங்களுக்கும் குடும்பம் எல்லாம் உண்டுதானே. நாங்கள் என்றாவது உங்கள் வீட்டுக்கு வந்து கொள்ளையடித்திருக்கிறோமா? நீங்கள் ஏன் எங்கள் காட்டை அழிக்கிறீர்கள். எங்கள் மரங்களைத் திருடுகிறீர்கள். யாரோ ஒரு முதலாளிக்காக எங்களைப் பகைத்துக் கொள்கிறீர்கள்?" அவர்கள் அமைதியாக அந்தப் பெண்ணைப் பார்த்தபடி நிற்கிறார்கள். அதில் ஒருவன் முறைக்கிறான்.

"ஒரு பெண் இப்படிப் பேசுகிறாளே என்று நினைக்கிறீர்களா?



(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமும் நல்லிணக்கமும்

பரிவாரங்கள் பின்தொடர, பல்லக்குப் புறப்பட்டு வந்தது. காஞ்சிப் பெரியவர்ஒரு மாதிரியாக அந்த ஊருக்கு வந்து தங்கிவிட்டார்.

அடியார்களிடம் பேசிக் கொண்டிருந்த போது "இந்த ஊர்ல சிவாலயம் எங்கே இருக்கு?" கேட்டார் பெரியவா. இந்தக் கேள்விக்கு, கூட்டத்தில் எவரிடம் இருந்தும் பதில் இல்லை.

அவர்களில் பழுத்த பழமான ஒரு முதியவர் மட்டும், 'இங்கே ஒரு பெருமாள் கோயில் இருக்கு. அதுபோக, மாரியம்மன் கோயிலும் ஐயனார் கோயிலும் உண்டு. ஊர் எல்லையில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கு.


அவ்வளவுதான். மத்தபடி இங்கே சிவன் கோயில் எதுவும் இருக்கிறதா தெரியலையே?"என்றார். 90 வயது மதிக்கத்தக்க அந்தப் பெரியவருக்கே சிவாலயம் குறித்த தகவல் எதுவும் தெரியவில்லை என்றால், மற்றவர்களுக்குத் தெரிந்திருக்க வழி இல்லையே.

மகா பெரியவா மறுபடியும் ஏதோ சைகையால் கேட்டார்... 'மேல் கோடியில பெருமாள் கோயில் இருந்தா, கீழ்க் கோடியில சிவன் கோயில் இருந்திருக்கணுமே?"

நிச்சயம் இருந்திருக்கும். ஆனால், தற்போது அங்கே சிவாலயம் இல்லை. முன்னொரு காலத்தில் இருந்ததா என்றால், அதுகுறித்தும் அந்த ஊர்க்காரர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அனைவரும் மௌனமாக இருந்தார்கள்.

அந்த நேரத்தில் ஓர் இஸ்லாமிய தம்பதி அங்கே வந்தனர். தன்னை லத்தீஃப் பாய் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த இஸ்லாமிய அன்பர், தன் மனைவியின் பெயர் மெகருன்னிசா என்றும் தெரிவித்தார். தாம் கொண்டு வந்திருந்த இரண்டு சீப்பு பேயன் பழங்களையும், ரோஜாப் பூக்களையும் மகாபெரியவா முன் சமர்ப்பித்தார்.

அவர்களை தலை முதல் பாதம் வரை ஏற இறங்கப் பார்த்தது நடமாடும் தெய்வம். கருணை மிகுந்த அந்தப் பார்வையில் மெய்மறந்து போனார்கள் அந்த இஸ்லாமிய தம்பதியர். ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு, சிலிர்ப்பான அந்தத் தருணத்தில் இருந்து மீண்டு, லத்தீஃப் பாய் பேசத் தொடங்கினார். அற்புதமான ஒரு தகவலை விவரித்தது அவரது பேச்சு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால், அங்கே சிவன் கோயில் ஒன்று இருந்திருக்கிறது. காலமாற்றத்தில் கோயில் சிதிலமாகி, மண்ணுக்குள் புதையுண்டு போனது. கோயில் இருந்த இடமும் பலரால் ஆக்கிரமிக்கப்பட்டு, பலப் பல கைகள் மாறி, இப்போது லத்தீஃப்



பாயின் வசம் இருக்கிறது.

'எங்க வாப்பா பள்ளிவாசல் நிலங்களைக் கவனிச்சுக்கும்போது, கூடவே கோயில் நிலங்களையும் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்தாக. ஒரு மரக்கால்கூட குறையாம அளந்து கொடுப்பாக. 'சிவன் சொத்து குலம் நாசம்'னு அவுகளுக்கு இருந்த அதே நேர்மையையும், நல்ல எண்ணத்தையும், புத்தியையும் எனக்கும் கொடுத்திருக்கான் இறைவன். ஆனாலும் என்ன... எனக்குப் பொறந்த ஒரு பெண் பிள்ளையும் மன வளர்ச்சி இல்லாம இருந்து, பத்து வருஷத்துக்கு முன்னாடி இறந்தும் போச்சு.

சரி... நாம அறிந்தோ அறியாமலோ பாவம் செஞ்சிருக்கோம்போல் அதனால்தான் அல்லாஹ் நமக்கு இப்படியரு தண்டனையைக் கொடுத்திருக்காருன்னு சமாதானம் பண்ணிக்கிட் டோம். காலமும் அப்படியும் இப்படியுமா ஓடிப் போயிடுச்சு. நேத்திக்கு கொல்லைப்பக்கம் மண்ல வேலை செஞ்சுட்டிருந்தேன். அப்ப... மண்வெட்டி ஏதோ கல்லுல பட்ட மாதிரி 'ணங்'குனு ஓசை கேட்டுச்சு. கவனமா மண்ணை விலக்கிப் பார்த்தால்... பெரிய சிவலிங்கம்! ராத்திரி முழுக்க உறக்கம் வரல்லே சாமி! 'அல்லா... இப்ப என்ன பண்றது!'ன்னு புரியாம, விசனத்தோட உட்கார்ந்திட்டிருந்தோம். விடிஞ்சதும் தான், சாமி இங்கே வந்திருக்கிறதா பக்கத்துல இருந்த ஜனங்க பேசிக்கிட்டாங்க. உடனே இங்கே ஓடி வந்துட்டோம். இதுக்குமேல நான் என்ன செய்யணும்னு சாமி தான் வழி காட்டணும்.

மனசார என் நிலத்தை எழுதித் தர்றேன். இதுக்காக எனக்கு பணம், காசு எதுவும் வேணாம். முன்னே இருந்த மாதிரியே அங்கே சிவன் கோயில் கட்டிக்கலாம். ஊர் ஜனங்களுக்கு அது பயன்பட்டுதுன்னா, அதனால ஊர் ஜனங்க சந்தோசப்படுவாங்கன்னா, அதுவே அல்லாவையும் சந்தோசப்படுத்தும்!" என்று நெகிழ்ச்சியோடு, கண்ணீர் மல்கப் பேசி முடித்தவர், அப்படியே இன்னொரு காரியத்தையும் செய்தார்.

'இந்தாங்க, கோயில் கட்ட எங்களோட காணிக்கையா நூத்தியரு ரூபாய். முதல் வரவா இதை வாங்கிக்குங்க!' என்று வெற்றிலை பாக்குத் தட்டில் வைத்துக் கொடுத்தார். அங்கிருந்த அனைவருக்கும் உடம்பு சிலிர்த்துப் போட்டது. அதுவரை மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த மகா பெரியவா, புன்னகையோடு சைகை யால் அந்த இஸ்லாமிய அன்பரை ஏதோ கேட்டார். அது அவருக்குப் புரியாமல் போகவே, ஒரு சிலேட்டும் பலப்பமும் கொண்டு வந்து மகாபெரியவாளிடம் தந்தார்கள். அவர் சிலேட்டில் எழுதிக் காண்பித்தார்... 'மார்க்கக் கடமையை முடித்துவிட்டீர்களா?' என்று.

படித்துப் பார்த்த இஸ்லாமிய அன்பர், 'இன்னும் இல்லே சாமி! அதுக்கான பண வசதியை அல்லா இன்னும் எங்களுக்குக் கொடுக்கலை. எத்தனையோ வருஷம் முயற்சி பண்ணியும் மக்கா- மதீனா போகும் பாக்கியம் இன்னும் வாய்க்கலை" என்றார் கண்ணீர் மல்க.

உடனே பெரியவர், வைத்திய நாதன் நின்றிருந்த பக்கமாகத் திரும்பினார். 'இத்தனை உசத்தியான மனுஷர் நிலத்தைத் தரேன்கிறார். அவாளுக்கு நாம எந்த ஒத்தாசையும் செய்ய வேண்டாமா?" என சைகையால் கேட்டார். தொடர்ந்து, என்ன செய்ய வேண்டும் என்பதையும் சைகையாலேயே உத்தரவு பிறப்பித்தார். பெரியவாளின் விருப்பத்தை அப்படியே கூட்டத்தாரிடம் எடுத்துச் சொன்னார் வைத்தியநாதன்.

அவ்வளவுதான்... ஒட்டுமொத்த ஊரும் சேர்ந்து ஒரே குரலில் ஒப்புக்கொண்டது... 'அவங்க புனித யாத்திரை போய்வர ஆகற செலவு மொத்தமும் நம்மளோடது!"

அதைக் கேட்டு இஸ்லாமிய தம்பதிக்கு மனம்கொள்ளா மகிழ்ச்சி! அவர்களுக்கு மட்டுமில்லாமல், அங்கிருந்த எல்லோருக்குமாக, கை தூக்கி ஆசீர்வாதம் செய்தது மானுட தெய்வம்.

பிறகு, மெல்ல எழுந்த மகாபெரியவா, தூணில் சாத்தியிருந்த தண்டத்தை கையில் எடுத்துக்கொண்டார். அப்படியே நடந்து வந்து பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டார். மீண்டும் ஊர்க்காரர்களைப் பார்த்து ஒரு புன்னகைக் கரம் உயர்த்தி ஆசீர்வாதம்!

பரிவாரங்கள் பின்தொடர, பல்லக்குப் புறப்பட்டது.

ஊர்வலத்துடன் வந்த அன்பர் மகாலிங்கம் சொன்னார்... 'எனக்கு இப்பத்தான் தெரியுது... மகாபெரியவா ஏன் திடீர்னு இந்த ஊருக்கு வர முடிவு பண்ணினார்னு!" காரணம் இன்றிக் காரியம் இல்லையே!



நல்லிணக்கம் என்ற வார்த்தைப் பிரயோகம் அண்மைக்காலமாக அரசியல் மட்டங்களில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. நல்லிணக்கம் என்ற விடயம் ஆன்மிகவயப்பட்ட ஒரு விடயம். அது மனங்களின் இயல்பான இணக்கத்தோடு வரவேண்டியது. இரு துருவங்களாக இருப்பவர்களை கொண்டு வந்து ஓரிடத்தில் குவிப்பதல்ல நல்லிணக்கம். ஒன்றாக இருத்தி உணவு பரிமாறுவதல்ல நல்லிணக்கம். ஒருவரை ஒருவர் மதித்து, மரியாதை செய்து அவர்க்கிடையே பண்பட்ட வார்த்தைகளைப் பரிமாறி நிர்மாணிக்கப்பட வேண்டியதொன்று. எந்தச் சமயத்தவராயினும் இதை ஒரு முறை படியுங்கள். ஒரு கணம் கண்மூடியபடி அதை மீள நினைவுறுத்துங்கள். ஆன்மிகம் எது வென்று தெரிந்துவிடும். நல்லிணக்கம் என்ன வென்று புரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலி சுமந்த...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழிவிரக்கத்தையும் செல்வராசு மூலம் நாவல் பதிவுசெய்கிறது. நாவலின் அடி நாதமாய் பக்கம்தோறும் அவலமே அலைந்துழல்கிறது. ஆனாலும் உயிரின் மதிப்புணர்ந்தவர்கள் எத்தகைய கருணை உள்ளத்தோடு சகமனிதர்களை அணுகினார்கள் என்பதை செல்வராசு, சோதி, பரமேசு, சுந்தரம், சுகி போன்ற பாத்திரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அதேசமயம் மரணம் இயற்கையானது என்றாலும் சொந்த உறவுகளிடையே அது நிகழும் பொழுது அதனைத் தாங்கிக் கொள்ளும் சக்தி மனிதர்களுக்கு இருப்பதில்லை. அது கோபமாகப் பரிமாணம் பெறும் பொழுது பாத்திரங்கள் வாயிலாக ஈழப்போராட்டம் குறித்த விமர்சனத்தையும் முன்வைக்க நூலாசிரியர் தவறவில்லை.

பாத்திரங்களின் உரையாடல் வழி தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளையும் வரலாற்று ரீதியாக அலசுவதோடு இடம்பெயர்ந்து செல்லும் இடங்களின் சிறப்புகளையும் அதுசார்ந்த நனவிடைதோய்தலின் பதிவாகவும் நாவல் அமைகின்றது. அத்தோடு இனவரைவியல் கூறுகளான மக்களின் சடங்குகளையும் பண்பாட்டம்சங்களையும் நாவல் பதிவு செய்துள்ளதற்கு வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் சித்திரிப்பு சான்றாகின்றது. சரளமான மொழிநடை நாவலைத் தொடர்ந்து வாசிப்பதற்கான உத்வேகத்தை அளிக்கின்றது.

நினைவுகளைக் கையளித்தல் என்பது ஆவணப்படுத்தலின் ஓர் முக்கிய அம்சமாகும். நூலாசிரியரே குறிப்பிடுவது போல அவரவர் கருத்து நிலைசார்ந்து இந்தப் படைப்புக் குறித்து உடன்பாடும் இருக்கலாம் முரண்பாடும் இருக்கலாம். ஆனாலும் முள்ளிவாய்க்கால் பேரவலம் ஈழத் தமிழர்களிடையே நிகழ்த்திச் சென்ற மாறாவடுவை நாளைய தலைமுறையும் நமது வரலாற்றை அறிந்து கொள்ளும் நோக்கில் நாவலைப் பயன்படுத்தியதில் படைப்பாளியாய் தனது கடமையை ஆதிலட்சுமி சிவகுமார் பூரணமாக நிறைவேற்றியுள்ளார் எனலாம். •

## கைபேசிகள்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் ‘டெம்பே’ பெண். எனக்கு பயம் கிடையாது. என்னை உங்களால் ஒன்றும் செய்திட முடியாது. இதுதான் உங்களுக்கான கடைசி எச்சரிக்கை. அடுத்த முறை நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம்.” என்று மிரட்டிவிட்டு நகர்கிறார் புயுர் டெம்பே (Puyr Tembe). அந்த இனத்தின் முதல் பட்டதாரி. வழக்கறிஞர்.

இப்படியாகத்தான் தங்கள் காடுகளைக் காக்க அவர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள். அந்தக் காட்டின் நிலப்பரப்பு மிக அதிகம். அவர்களால் எல்லாவற்றையும் தடுக்க முடிவதில்லை. சட்டவிரோத மரக்கடத்தல் (Illegal Logging) தொடர்ந்துகொண்டேயிருந்தது. அமெரிக்காவின் சிலிக்கான் வேலியில் பணம் பண்ணும் முதலைகளுக்கு நடுவே, பச்சைகளின் குரலைக் கேட்க வைக்க போராடிக் கொண்டிருந்தார் டொஃபேர் வைற் (Topher White). அவர் ‘ரெயின் ஃபாரஸ்ட் கனெக்ஷன்’ (Rainforest Connection) எனும் அமைப்பைத் தொடங்கினார்.

சில பழைய செல்போன்களை சேகரித்தார். அதில் பல நாள்கள் சார்ஜ் நிலைத்திருக்கும் வகையில், சோலர்களை இணைத்தார். இன்னும் சில தொழில்நுட்பங்களை அதோடு இணைத்தார். ஒரு சின்னப் பெட்டியாகத் தோற்றமளித்தது அந்தக் கருவி. அதை எடுத்துக் கொண்டு இந்தோனேசியாவின் போர்னியோ காடுகளுக்குச் சென்றார். அங்கு அதை சோதித்துப் பார்த்தார்.

சில மரங்களில் அந்தக் கருவியைப் பொருத்தினார். அந்தக் கருவியோடு சில கைபேசிகளை இணைத்தார். அது அந்தப் பகுதியின் சத்தங்களை மிகக் கூர்மையாகப் பதிவு செய்தது. பலவித ஒலி அமைப்புகளையும் அது வேறுபடுத்திக் காட்டியது. மரம் அறுப்பது, மரம் வெட்டுவது போன்ற சத்தங்களைக் கேட்கும் போது, அந்த ஒலியின் அளவைக்கொண்டு அதை இனம் பிரித்தது. அதை, அந்தக் கருவியோடு இணைக்கப்பட்டிருக்கும் கைபேசிகளுக்குத் தகவல்களாக அனுப்பியது. அதைக்கொண்டு, காடுகளில் எந்தப் பகுதிகளில் மரம் வெட்டப்படுகிறது என்ற தகவலை எளிதாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. இந்தச் சோதனை வெற்றியடைந்த சமயம், பிரேசிலின் டெம்பே மக்களின் பிரச்சினை குறித்து கேள்விப்பட்டு அங்கு போனார் டொஃபேர் வைட்.

அந்த மக்களோடு உரையாடினார். அவர்களிடம் தொழில்நுட்பத்தின் அவசியத்தை உணர்த்தினார். தொழில்நுட்பத்தோடு இணைந்து செயல்பட்டால், இன்னும் சிறப்பான முறையில் தங்கள் காடுகளைப் பாதுகாக்க முடியும் என்று பேசினார். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். மழைக்காட்டின் பல இடங்களில், மரங்களில் அந்தக் கருவி பொருத்தப்பட்டது. 30 டெம்பே போராளிகளின் கைபேசிகளுடனும் அது இண்ணக்கப்பட்டது.

மாதங்கள் கடந்தன. ஆண்டுகள் ஆயின. இன்று அங்கு இந்தத் தொழில்நுட்பம் பெரியளவில் அவர்களுக்கு உதவியிருக்கின்றன. முழுமையாகச் சட்டவிரோத மரக்கடத்தலைத் தடுக்க முடியாவிட்டாலும் கூட இது அவர்களின் ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணிகளை எளிமைப்படுத்தியிருக்கிறது.

இது குறித்து புயுர் டெம்பே இப்படியாகச் சொல்கிறார்...

“எங்களுக்குத் தெரியும்... இங்கு பல பேர் செய்யக் கூடாத பல விடயங்களை மிகவும் பிடிவாதத்தோடு செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், நாங்கள் நம்புகிறோம். ஒருநாள் எங்கள் காடுகளின் உயிராதாரங்களைக் கொள்ளையடிக்கும் இந்தக் கும்பலை மொத்தமாக அழிப்போம். அன்று இந்த மழைக்காடுகளின் மரங்கள் நிம்மதியாக மழையில் நனையும்.”

## தண்ணீர்...

(14ஆம் பக்கம் பார்க்க)

ஒரு கிழவன் பூணுலை இழுத்துவிட்டுக் கொண்டு மூலையிலே செருமிக் கொண்டு நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டு முக்கி முனங்கிக்கொண்டு இருந்தான். அவனை யாரும் கவனிப்பார் இல்லை. அவன் சுற்றமெல்லாம் இன்று அவனைக் கைவிட்டுவிட்டன. அவன் அவர்கட்கெல்லாம் என்ன செய்தான்? ஒரே ஒரு பிழை, வாலிபமாய் இருந்த காலத்திலே தெரியாமல் தூரத்திலே உள்ள வெள்ளாளப் பெண்ணைப் பார்ப்பனத்தி என்று கல்யாணம் செய்தான். சிலநாட்கள் சென்றதன் பின் சுற்றம் எல்லாம் அவனை இகழ்ந்து தள்ளிவிட்டது. அதன் பின்புதான் அவனுக்கு விஷயம் புரிந்தது. தான் வெள்ளாளப் பெண்ணைக் கட்டிவிட்டான் என்று உணர்ந்ததும் மெல்ல அவளைக் கைவிட்டான்.

பெண்வழியால் லாபமும் இல்லை, இனசனமும் இல்லை. இன்றுவரையும் தனியேதான் காலந்தள்ளினான். இன்றைக்கு வியாதியாய்ப் போனான். கவனிப்பார் இல்லை. தர்ம ஆஸ்பத்திரியிலே கிடக்கிறான். அவனுக்கு மேலும் மேலும் மூச்சுவாங்கத் தொடங்கியது. தண்ணீர் விடாயெடுத்தது. அடிநாவிலே ஈரலிப்பில்லை. இருமி இருமி வறண்டு போயிற்று. தாகவிடாய் வரவர அதிகரித்தது. பேச்சுக் கொடுத்தாலோ இருமல் வாட்டுகிறது.

‘அம்மா, தண்ணீர்! நாவை வறட்டுகிறது’ என்று சொன்னான் அந்தக் கிழவன் கெஞ்சும் குரலில், பதிலே இல்லை, அடுத்த அறையில் இருந்து ஒரு இருமல் அதற்குப் பதில், கொஞ்சநேரம் நிசப்தம்.

‘அம்மா, என்னால் சகிக்க முடியவில்லை. தண்ணீர் விடாயால் செத்துப் போய்விடுவேன். தண்ணீர் கொடுங்களம்மா” யாருமே மூச்சு விடவில்லை. தாதிகள் எல்லாம் ஒரே உறக்கம் போலும்.

ஒரு பெண்ணுருவம் அந்த மூலையருகே வந்தது. ஆமாம் அவளும் ஒரு தாதிப் பெண்தான். அந்த ஆஸ்பத்திரியில், காலதேவன் கீறிய கோடுகள் பதிந்த அவன் முகத்தை உற்றுப் பார்த்தது. ஆனாலும் அந்த முகம் அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. கிழவன் தண்ணீருக்காக வாயைத் திறந்தான்.

‘ஐயா, பறைச்சி தொட்டுத் தண்ணீர் தந்தால் குடிப்பீர்களா? தாங்கள் பிராமணரல்லவா?’ என்றாள் அவள்.

‘அம்மா, அம்மா, குழந்தாய் பிராமணனானாலென்ன? பறையனானாலென்ன? என் தாகத்திற்கு நீர் கொடம்மா! கொடிய மரண தாகம் நெஞ்சை அடைக்கிறது.’

அவள் ஒரு சின்னப் பாத்திரத்தில் இளஞ்சூடான நீரைக் கொண்டு வந்தாள். கிழவன் விடாய் அவதியால் வாயைத் திறந்தான். ஆகா! உள்ளம் பூரிக்க ஆத்மா சாந்தியடைய மெல்ல மெல்ல நீரை வார்த்தாள் பெண்மணி.

‘அம்மா, இந்த மரண விடாயில் என்னைக் காப்பாறினாய் உன் குலம் நன்றாக வாழட்டும். நீ யாரம்மா?’

‘ஐயா, என்னைத் தெரியாதா? நன்றாக உற்றுப் பாருங்கள்’ என்று குனிந்தாள் அந்தத் தாதி.

‘ஞாபகம் இல்லையே?’

தன் நெற்றியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தாள். ‘இதோ பாருங்கள் இந்த மறுவை. தண்ணீர் விடாய்த்து அன்றொருநாள் உங்கள் வீட்டில் வந்தேனல்லவா? தாக விடாய் தாங்காமல் சிறுபிள்ளைத்தனத்தால் ஏதோ அனுஷ்டானச் செம்பைத் தொட்டுவிட்டேனென்று நீங்கள் செம்பால் எறிந்த காயம் இதுதான்’ அவள் நெற்றியைக் காட்டினாள் கிழவனுக்கு.

கிழவன் முகம் காட்டிய குறியின் உணர்ச்சி, ஏதோ புதிதாய் இருந்தது. ‘ஆமாம், கதிரவன் மகளல்லவா? எப்படியம்மா இங்கே வந்தாய்? தாதியாவும் வேலை பார்க்கிறாயே?’

‘ஆம், ஐயா, எல்லாம் அந்தக் கிறிஸ்தவப் பெரியாரின் கிருபைதான். அன்றைக்கு நீங்கள் தீர்க்காத தாகத்தை அந்தப் பெரியார்கள் தீர்த்தார்கள். கல்வியுமளித்து இந்த நிலையில் வைத்தார்கள்.’

கிழவன் உள்ளம் வெடித்துவிட்டது. ‘என் மரண தாகத்தை நீக்கிய கரங்களுக்கா அன்று இரத்தக்கறை ஏற்படவேண்டும்! இந்த விடாய் தானே அந்தப் பசலைக்கும் அன்று’

‘அம்மா என்னை மன்னி, ஜாதிக் கர்வத்தால் அன்று உன்னை எறிந்த என்னை மனப்பூர்வமாய் மன்னி!” கிழவன் அவள் காலடியில் விழ எழுந்தான், பாவம்! அப்படியே தொப்பென்று விழுந்தான். விடாய் அடங்கியதோடு, அவன் கண் திறக்கவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரிட்டை சொல்லி அழ?

### இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## நினைச்சால் செய்யலாம் ஆனால் செய்ய மனமில்லையே!



**ஆவா** குழுவுக்கு ஆப்பு எண்டு ஒரு செய்தி. வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ 100 பொலிஸ்காரரை நியமிச்சு யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், கோப்பாய் எண்டு நாலு இடத்திலையும் ஆவாவைத் தேடப் போறாராம். முந்தி அரசாங்கம் புலியளோடை சண்டைப் பிடிக்கேக்கை "ஜெய சிக்குறு" "சத்ஜெய" "ரிவிரச" எண்டு அதுக்கு ஒவ்வொரு பேரை வைச்சுக் கொண்டுதான் சண்டைப்பிடிச்சவை. அப்பிடி உதுக்கும் "ஆவாக் குக்குறு" "மேல்வாய் சக்குறு" எண்டு ஏதேன் பேருகளை வைச்சுச் செய்யலாமே?

ஒரு கதைக்குச் சொல்லுவம். அண்டைக்கு விஜயகலாவின்ரை கூட்டத்திலை அவ சொன்னதுக்கு எல்லாம் கைதட்டின ஆக்களை அடையாளங் கண்டு நடவடிக்கை எடுக்கப் போறம் எண்டு சொல்லுற அரச அதிகாரிகளுக்குத் தெரியாதோ என்னென்ன நடவடிக்கை எடுத்து ஆவாவையும், கோவாவையும் கட்டுப்படுத்த வேணும் எண்டு. அவை ஜீ.ஏ மட்டத்திலை பொலிஸூக்கும், ஆமிக்கும் அழுத்தங் குடுக்கலாம் தானே? அதோடை அவையின்ரை பொறுப்பா அவை என்ன செய்ய வேணுமெண்டால், யாழ்.குடா நாட்டின்ரை இப் போதைய நிலைமை இதுதான் எண்டு மத்தியஅரசாங்கத்துக்கு அறிக்கை ஒண்டை எழுதிச் சமர்ப்பிகலாம், என்ன?

இப்ப ஏன் பொலிஸூக்கு உறைச்சிருக்குது தெரியுமே? உது யாழ்ப்பாணச் சனத்தின்ரை வாழ்க்கைப் பிரச்சினையாப் போச்செண்டு கண்ட சனம் தாங்களாக் கெம்ப வெளிக்கிட் டிட்டினம் எண்டது ஒரு பக்கம். மற்றது மகேஸ்வரன்ரை பெண்சாதி கண்டபடி வாயைத் துறந்து புலி வேணும் எண்டு கத்த வெளிக்கிட்டது அடுத்த பக்கம். கண்ணகி காளி வேஷம் கொண்டதாலை கோவலனுக்கு நீதி கிடைச்சிது. இப்ப மகேஸ்வரன்ரை பெண்சாதி விஜயகலா கத்திக் குளறிக் காளி வேஷம் கொண்டபடியாலை தான் யாழ்ப்பாணத்திலை கஞ்சா அடிச்சிட்டு காவாலி வேலைசெய்யிற கூட்டத்தின்ரை கதையும் வெளியாலைவரத் துவங்கிவிட் டிது.

இப்ப சமூகத்திலை நடக்கிற அமளி துமளிக்குக் காரணம் தனிய அந்தக் குற்றத்தைச் செய்யிற ஆக்கள் மட்டுமில்லை. முதலிலை நான் பொலிஸ்காரரைத்தான் குறை சொல்லுவன் ஏனெண்டால் அவைக்குத்தான் அந்தப் பவர் இருக்கு. ஆக்களை மடக்கிப் பிடிச்சு மூலந்தள்ள வைக்க அவையளாலைதான் முடியும். ஆனால் அவைக்கும் அதைச் செய்ய விருப்பம் இல்லைப் போலை கிடக்கு. உதுகளைப் பற்றிக் கொம்பிளைன் குடுக்கப் போனால் அதை எடுக்க நெளியினமாம். பொலிஸ் ஸ்டேசனுக்குக் கொம்பிளைன் குடுக்கப் போறவையை அலைக்கழிக்கினமாம்.

இத்தினை பிரச்சனைக்குப் பிறகும் ஆவா குழுவைப் பிடிக்கமாட்டினமாம். ஆவாக் குழு எண்டு சந்தேகிக்கிற ஆக்களைத்தான் பிடிக்கப் போயினமாம். அப்பிடி சந்தேகத்தின்பேராலை பிடிச்சாத்தானே இரண்டொரு தவணைக்குப் பிறகு பிணையிலை காசை வேண்டிக் கொண்டு விடலாம் எண்டு ஆக்கள் கதைக்கினம். அப்பிடி ஆக்கள் கதைக்கினமெண்டிட்டு அதைப் பகிடியாக் காத்திலை விடேலாது. அப்ப நாங்களும் கொஞ்சம் அவதானமாத்தான் இதிலை இருக்க வேணும் எண்டு நான் நினைக்கிறன். அவை ஆரைப் பிடிக்கினம். ஆரை விடுகினம் எண்டு பாக்கவேணும்.

சத்தியமாச் சொல்லுறன். யாழ்ப்பாணத்திலை வாள் வெட்டுக்குறூப்பெண்டு ஒண்டு இருக்கு. அது உண்மை. ஆனால் அந்த குறூப்பிலை ஆர் ஆர் வாளைக் கொண்டு உலாவினம் எண்டு ஊருலகத்துக்குத் தெரியாட்டாலும் அவை, இருக்கிற வீட்டுக்கு அக்கம் பக்கத்திலை இருக்கிற ஆக்களுக்கு, இல்லாட்டி அவையின்ரை தாய்தேப்பனுக்கு இல்லாட்டி அயலட்டைக்கு இல்லாட்டி கத்தி கம்பாயம் எண்டு அடிச்சுக் குடுத்த பட்டறைக்காரருக்குத் தெரியுமேல்லே? அப்ப சனத்தின்ரை நன்மைக்காக அவை உந்தக் குற்றவாளியள் ஆர் எண்டதைச் சொல்லிக் குடுக்கலாம்தானே? அப்பிடிச் சொல்லிக் குடுக்கப் பயம் எண்டால் அவை பற்றின விபரத்தை ஒரு பேப்பரிலை எழுதி பேப்பர் அடிக்கிற கொம்பனியளுக்குத் தன்னும் தபாலிலை போடலாம்தானே? பேப்பர் காரருக்கு உங்கடை ஐசீ நம்பர் தேவை இல்லை. ஆர் அந்தக் கடைப்புலியள் எண்டு தெரியவேணும் அவ்வளவுதான்.

"அதுக்கும் எங்களுக்குப் பயமாக்கிடக்கு" எண்டு சொல்லுறியளோ? புலியளின்ரை வரலாற்றிலை ஒரு கதை கிடக்கு. சண்டை நடந்துகொண்டிருக்கிற சமயத்திலை ஒரு கட்டத்திலை மாத்தையா புலியளை இந்தியாவுக்கு அடைவு வைக்கிற காரியத்தைச் செய்யிறார் எண்டு கண்டு அதை தலைவருக்குக் காட்டிக் குடுத்தவர் அவற்றை பெண்சாதிதான் எண்டது எத்தினைபேருக்குத் தெரியும்? அதுதான் தியாகம் எண்டு சொல்லுறது. எப்பவும் ஆரேன் ஒரு ஆளின்ரை தியாகத்திலை தான் ஒரு சமூகம் பிரச்சினையிலை இருந்து வெளியாலை வரும். அப்ப ஆர் யாழ்ப்பாணத்துச் சனம் வாள் வெட்டிலை இருந்து வெளியாலை வரத் தங்களைத் தியாகஞ் செய்யப் போயினம். உந்த விசியத்திலை நாங்கள் முழுக்க முழுக்கப் பொலிஸை நம்பி வேலை இல்லை. அவை ஒரு மட்டத்துக்குத்தான் பறப்பினம். அதுக்கு மேலை அவை பறக்காயினம். பறந்தால் என்ன நடக்கும் எண்டும் அவைக்குத் தெரியும். பொலிஸ் உத்தியோகம் எண்டது அவையின்ரை தொழில். அவை தொழிலிலை தியாகஞ் செய்ய மாட்டினம். அப்பிடிச் செய்யவும் ஏலாது. இப்பிடிப் பட்ட சமூக விரோதச் செயலை அடக்க தியாகமும், அர்ப்பணிப்பும் தேவை. இது சும்மா ஒபிசிலை மாதச் சம்பளத்துக்கு வேலை செய்து நேரத்துக்குக் கையெழுத்தைப் போட்டிட்டு வீட்டுக்குப் போறமாதிரியான வேலையே? கண்ணுக்கை எண்ணையை விட்டுக் கொண்டு தேடவேணும். அப்பிடி ஆர் தேடுறது.

சனத்தின்ரை நின்மதியைக் குழப்பிறதாலை ஒரு சமூகத்தின்ரை நின்மதியைக் குழப்பலாம். எப்பவும் ஒரு ஏக்கத்தோடை சனத்தை வைச்சிருந்தால்தான் தங்கடை பருப்பு அவியும் எண்டது அரசியல் வாதியின்ரை சமன்பாடுகளிலை ஒண்டு. அப்ப அரசியல்வாதியள் ஒண்டு சேந்து ஒருமைப்பாடா நிண்டால்தான் ஏதேனும் நடக்கும் எண்டது என்ரை ஞாயம். அப்ப அரசியல்வாதியளுக்கு ஆசை இல்லாமல் போக வேணும். அவையும் பதவி ஆசை, பண ஆசை, புகழ் ஆசை எண்டு ஆசையளை மூட்டை கட்டி வைச்சிருக்கினம். இப்ப முந்தின மாதிரி அரசியல்வாதியளிட்டை யும் மனச்சாட்சி இல்லை. அதைப் போலை பொது சனத்திட்டையும் நீதி ஞாயம் கிடையாது. ஏதோ ஆடு மாடு மாதிரி ஒரு சுழற்சி முறையிலை சீவிச்சிட்டுப் போவம் எண்டதுதான் அவையின்ரையும் யோசனையாக் கிடக்குப் போலை...

என்ன நடக்கப்போகுதோ? தெரியாது. நடக்கிறதைப் பாப்பம் எண்டு சொல்லவும் மனமில்லை. இனிவருங்காலத்தை நினைக்கப் பயமாக்கிடக்கு. உதை எல்லாம் நெஞ்சுக்கை வைச்சு குமையாமல் வெளியிலை ஆரிட்டைச் சொல்லி அழ?

**கோளரங்கன்**

## வால் நீண்ட கதை



அவனது தற்கொலைக்குப் பிறகாக
முளைத்த கதைக்கு
கால்கள் மட்டுமல்ல
நீண்ட வாலும் இருந்தது
நள்ளிரவுத் தற்கொலைக்கு
முந்தைய சாயங்காலத்தில்
அவன் நீலநிறச் சட்டை
அணிந்திருந்ததாக
அவள் சொன்னாள்
நீண்டநேரம் மொட்டைமாடியில்
நின்றுகொண்டு
வானத்தையே வெறித்துப்
பார்த்துக்கொண்டிருந்ததாக
இன்னொருத்தி சொன்னாள்
எப்போதும்போல் இல்லாமல்
அன்றைக்கு அவனது முகம்
பிரகாசமாக இருந்ததாக
விளக்குத்தாம் போட்டவள் சொன்னாள்
ஓரிரு தினங்களுக்கு முன்
அவ்வீட்டிற்கு சற்றும் சம்பந்தமில்லாத
ஒரு பெண்ணின் நிழல்
சமையலறை ஜன்னலில் தெரிந்ததாக
பின் வீட்டு டீச்சர் சொன்னபோதே
அக்கதையின் வால்
காலப் புதரின் பொந்துக்குள்
தன்னை இழுத்துக்கொள்ளத்
தொடங்கியிருந்தது.

— ஜெ.முத்துக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

34

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

"கொஞ்சம் இறுக்கம் தான்... இருபத்தி நாலு மணி நேர விழிப்பு நிலையிலை இருக்க வேண்டியிருக்குது", என்றாள் ரூபா.

"எந்த ஒரு பக்கத்தாலையும் உடைக்க விட்டிடக் கூடாது. விட்டமெண்டால் லேசிலை திருப்பிப் பிடிக்கேலாது"

"ஓமோம்.. விளங்குது.. இந்த இடத்தின்ரை அமைவு அப்பிடி.. நாங்கள் எத்தினை பேர் வீரச்சாவடைஞ்சாலும் ஒரு அங்குலம் கூட அவனை முன்னேற விடுறதில்லை"

சிவம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான், "ம்.. இப்ப அதுதான் பெரிய பிரச்சினை"

"என்னது?"

"ஒரு கிழமைக்குள்ள இருபத்தொரு போராளிகள் வீரச்சாவடைஞ்சிட்டினம்.. முந்தநாள் சிறப்புத் தளபதி கூப்பிட்டு மேலிடத் திலையிருந்து கேள்வி மேல கேள்வியாய் வந்து கொண்டிருக்குது, எண்டும் எங்கடை கவனக்குறைவுதான் காரணம் எண்டும் ஏசிப் போட்டார்"

ரூபாவும் அதை ஏற்றுக் கொண்டாள். "ஓம் சிவம்.. ஒவ்வொரு போராளி வீரச்சாவடையிற போதும் அண்ணைக்கு இதயத்தால இரத்தம் வடியும்"

"எங்களாலையும் அதை உணர முடியுது. ஆனால் மோதல்கள் வரேக்கை இழப்புகளைத் தவிர்க்க முடியேல்லை. இப்பவெல்லாம் அவங்கள் முந்தி மாதிரி இல்லை. ஒருத்தன் விழ மற்றவன் எண்டு முன்னுக்கு வாறாங்கள்"

"வரட்டும், வரட்டும். எங்கட துவக்குகளுக்குத் தீனி குடுப்பம்", என்றாள் ரூபா மிகவும் உறுதியுடன்.

சிவம் விடைபெற்றுக் கொண்டு அடுத்த காவலரண்களைக் கண்காணிக்கப் புறப்பட்டான். அவன் தளபதியைச் சந்திக்கப் போனபோது பெரும் எதிர்பார்ப்புடனேயே போயிருந்தான். ஏதோ ஓர் அதிரடி நட வடிக்கை தொடர்பாகவோ ஊடுருவல் தாக்குதல் தொடர்பாகக் கலந்துரையாடவே தாங்கள் அழைக்கப்பட்டதாக எண்ணியிருந்தான்.

ஆனால் அவர் அவை பற்றி எதுவுமே பேசவில்லை. மாறாக பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் போராளிகளின் இழப்புக்களைத் தவிர்ப்பது பற்றியுமே கதைத்தார். சிவம் ஏமாற்றத்துடனும், கண்டனம் வேண்டிய கவலையுடனுமே திரும்பி யிருந்தான். அவன் அவ்விடத்திலிருந்து அகன்ற சில நிமிடங்களிலேயே ரூபாவின் வோக்கி இயங்க ஆரம்பித்தது.

"ரூபா.. ரூபா.. கணேஸ்.. ரூபா... ரூபா.. கணேஸ்." "கணேஸ்.. கணேஸ்.. ரூபா"

"ரூபா.. எப்பிடி இருக்குது நிலைமையள்?"

"ஒவ்வொரு நாளும் மோதல்தான்.. ஒரு அங்குலம் கூட முன்னேற விடுறதில்லை எண்ட முடிவோடை போராடுறம்"




கணேசிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிவந்தது. வோக்கியில் கேட்பது அவன், "உங்கை சண்டை நடக்க இஞ்சை நான் கட்டிலிலை படுத்திருக்க நித்திரை வருகுதில்லை. என்ன செய்யிறது இடுப்புக்கு கீழ இயங்காது எண்டிட்டினம்"

நோயுற்று இயலாத நிலையிலும் அவனுள் கொழுந்து விட்டெரிந்த அவனின் நினைவுகள் அவளை மெய் சிலிர்க்க வைத்தன. ஆனால் தன்னைப்பற்றி அன்புடன் விசாரிக்கமாட்டானா என்ற ஏக்கமும் அவளுள் எழாமல் இல்லை. எனினும் அவள், "நீங்கள் கவலைப்படாதேங்கோ.. உங்களுக்காகவும் சேர்த்து நான் சண்டை பிடிக்கிறன்", என்றாள்.

"நல்லது, நல்லது... அப்பிடித்தான் இருக்கவேணும்!", என்று விட்டு வோக்கி உரையாடலை முடிவுக்கு கொண்டுவந்தான் கணேஸ்.

அன்பான நாலு வார்த்தைகளுக்காக ஏங்கிய அவளின் மனம் ஏமாற்றமடைந்த போதிலும், அவனது குரலை பல நாள்களின் பின்பு கேட்டது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. உயர்ந்த இலட்சத்தியத்துக்கான பயணத்தின்போது, தோன்றிய காதல்கூட அந்த இலட்சியங்களுக்குச் சேவைசெய்யும் ஓர் ஆயுதமாக மிளிர்வதை உணர்ந்தபோது, ஏதோ ஒரு விதமான பெருமை அவளின் நெஞ்சை நிறைத்தது.

இரவு காட்டிச் சாதனத்தின் ஊடாக காவல் நிலையின் முன் பகுதியை நோக்கிக் கொண்டிருந்த மலையவன், "டேய்.. மலையாண்டி பன்னை!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். வதனி தேனீர் கேத்தலுடன் நின்றுகொண்டிருந்தாள்.

அவள் தான் கொண்டு வந்த குவளைகளில் தேனீரை ஊற்றி மலையவனிடமும் மற்ற இரு போராளிகளிடமும் கொடுத்துவிட்டு,

"தேத்தண்ணியைக் குடிச்சிட்டு வாய் பாத்துக் கொண்டிராமல் வடிவாய் 'சென்றி' பாருங்கோ" என்றாள்.

"என்னண்டு உன்ரை வாயைப் பாக்கிறது. நீ போகேக்க கொண்டு போடுவியே", என்றான் மலையவன் சிரித்தவாறே. அவள் வெற்றுக் குவளைகளை வாங்கிக் கொண்டு புறப்பட்டாள். போராளிகள் மூவரும் அவளுக்கு புன்னகையுடன் விடை கொடுத்தனர்.

அவள் சென்று சில நிமிடங்களில். "ஐயோ.. அண்ணா... என்னை ஆமி பிடிச்சிட்டான்... காப்பாத்துங்கோ..", என்ற வதனி யின் அவலக்குரல் ஒலித்தது. மலையவன் படபடப்புடன் இரவுக்காட்டி சாதனத்தை எடுத்து முன் பகுதியை நோக்கினான். வதனி நிலத்தில் விழுந்து காலை உதறிப் போராட, அவளின் இரு கரங்களையும் பிடித்து இழுத்துக் கொண்டு இராணுவத்தினர் இருவர் ஓடிக்கொண்டிருந்தனர். சாக்கு மறைப்புக்குக் கீழால் இரகசியமாகப் புகுந்த இராணுவ 'றெக்கிகள்', வதனியை மடக்கி மறைப்புக்கு வெளியே கொண்டு சென்றுவிட்டனர் என்பதை அவன் உடனடியாகவே புரிந்து கொண்டான். ஒரு கணம் கூட தாமதிக்காது அவன் தனது துப்பாக்கியை இயக்கினான். படையினர் இருவரும் அந்த இடத்திலேயே விழுந்து விட்டனர். ஆனால் மறுமுனை யிலிருந்து ஓடிவந்த படையினரில் ஒருவன் வதனியைக் கட்டிப் பிடித்து தனக்கு மறைப்பாக்கிக் கொண்டு பின் நகர்ந்தான்.

வதனி, கத்தினாள், "அண்ணா... என்னைச் சுடடா... என்னைச் சுடு", ஒரு சிறு இடைவெளியே இருந்தது. பற்றை மறைவிற்குள் அவளைக் கொண்டு போய்விட்டால் எதுவுமே செய்யமுடியாது. வதனியைத் தமது காம வக்கிரங்களுக்குப் பலியாக்கிவிட்டு கொன்று விடுவார்கள். வதனியைக் கட்டிப்பிடித்திருப்பவனைச் சுட்டால் வதனிக்கும் பட்டுவிடும்.

வதனி மீண்டும் கத்தினாள், "என்னைச் சுடு.. சுடு.. சுட்டா", மலையவனுக்கு வேறு வழியிருக்கவில்லை. அவன் துப்பாக்கியை இயக்கினான். வதனியும் படையினர் நால்வரும் சுருண்டு விழுந்தனர். மிகுதியானோர் காயங்களுடன் ஓடிவிட்டனர்.

மோதல் தொடங்கிவிட்ட தெனக் கருதிய சிவம் எல்லா நிலைகளுக்கும் தயார் நிலை அறிவித்துவிட்டு, ஒரு குழுவுடன் அங்கு வந்தான். அவன் வந்த போது எல்லாமே அமைதியாகிவிட்டன. மலையவன் சிவத்திடம் விடயத்தை சொன்னான். சிவம் இரவுக் காட்டி சாதனத்தை வாங்கிப் பார்த்த போது முன்னால் இரு படையினரின் சடலங்களும் சற்றுத்தள்ளி நான்கு படையினரின் உடலங்களும் கிடந்தன. நடுவில் வதனியின் வித்துடல் கிடந்தது.

சிவம் சிறிது நேரம் அமைதியாக யோசித்துவிட்டு, "மலையவன், வதனியின்ரை வித்துடலை அவங்கள் எடுக்க விடக்கூடாது. நீங்கள் எடுக்கவும் முயற்சிக்க வேண்டாம். நாளைக்கு இரவு பார்ப்பம்.." என்றான்.

"சரியண்ணை..", என்றான் மலையவன். சற்று முன்பு சிரித்துப் பேசிக் கலகலத்து, எல்லாருக்கும் தேனீர் கொடுத்த அந்தச் சின்னப் பறவையைத் தானே சுடவேண்டி நிலைமை ஏற்பட்டுவிட்டதை எண்ணிய போது அவனால் வேதனையைத் தாங்க முடியவில்லை. அவளின் உடலை மடியில் கிடத்தி, "தங்கச்சி, தங்கச்சி", எனக் கதறி

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Smoke & Mirrors (Spanish)


- டிசே தமிழன்

சுவாரசியமான ஓர் அரசியல் திரைப்படம் இதுவாகும். இந்தக் கதையில் கூறப்படும் விடயங்கள் ஸ்பெயினில் 1990களில் நிகழ்ந்து அன்றைய ஸ்பானிய சோஷலிச அரசு தேர்தலில் தோற்பதற்கும் ஒரு காரணம் எனச் சொல்லப்படுகின்றது. ஒரு தனி மனிதன் எப்படி ஒரு அரசோடு சூதாடி தனது பழியைத் தீர்க்கின்றான் என்பதே இதன் கதைச் சுருக்கம்.

வங்கியில் வேலை செய்யும் Francisco Paesa என்கின்ற Paco ஸ்பானிய அரசுக்காய் உளவு வேலைகளும் செய்கின்றார். அன்றைக்கு ஸ்பானிய அரசுக்குத் தலையிடியாயிருக்கும் பாஸ்க் கிளர்ச்சியாளர்களை அடக்க சட்டத்திற்குப் புறம்பாக ஆயுதங்களை வாங்கிக் கொடுத்து அரசுக்கு உதவி செய்கின்றார். எனினும் ஒரு கட்டத்தில் அரசு அவரைக் கைவிட்டு, தம் நலனின் நிமித்தம் அவரை நாட்டை விட்டுப் போகச் சொல்லிக் கட்டளையிடுகின்றது. இன்னொரு நாட்டில் பதுங்கியிருந்து விட்டு, குடும்ப வாழ்வில் நெருக்கடிகளைச் சந்தித்தும், பணத்தை இழந்தும், மீண்டும் ஸ்பெய்னுக்குள் Paco நுழைகின்றார்.

அதே காலகட்டத்தில் ஸ்பானிய பொலிஸ் கொமிஷனர் ஒருவர், அரசின் நிதியிலிருந்து 12 மில்லியனை தனது வங்கிக்கணக்கில் போட்டதால் சிக்கலுக்குள்ளாகின்றார். Pacoவை இதன் நிமித்தம் உதவ அழைக்க, செய்யும் உதவிக்காகத் தனக்கு ஒரு மில்லியன் தரவேண்டும் என்கின்றார். இந்த விடயத்தை வைத்து Paco ஸ்பானிய அரசோடு எலியும் பூனையும் விளையாட்டு ஆடத்தொடங்குகின்றார். இந்த ஊழல், நாட்டில் பெரும் பிரச்சினையாக ஊதிக் கிளம்ப, Paco அந்த கொமிஷனரை கிட்டத்தட்ட ஒரு வருடம் பாரிஸ் ஒளித்து வைத்துக்கொண்டு, ஸ்பானிய அரசிடம் அந்த நபர் லாவோஸில் இருக்கின்றார் என நம்பவைத்து ஒவ்வொரு காய்களாக நகர்த்துகின்றார்.

அன்றைய கால ஸ்பெயின் நீதியமைச்சராக இருப்பவரிடம் சென்று, ஊழல் செய்த தலைமறைவான நபரைப் பிடித்துவிட்டால், நீங்கள் அடுத்த ஜனாதிபதியாக லாம் என நம்பவைத்து அவரிடமும் பணம் வாங்குகின்றார். பின்னர் பொறுத்த இடத்தில் அந்த நீதியமைச்சரையும் Paco கைவிடுகின்றார்.




இறுதியில் நீதி அமைச்சரை மட்டுமின்றி, பொலிஸ் கொமிஷனரையும் கைவிட்டு பெரும் பணதோடு எப்படி Paco தலைமறைவாகின்றார் என்பதுதான் சுவாரசியமானது. அது மட்டுமில்லை, தலைமறைவான சில வருடங்களில் தான் இறந்துவிட்டேன் என ஸ்பானிய அரசை ஒருவகையில் நம்பவைத்து, பிறகு தனக்கு இந்த விடயத்தில் உதவியவர்களையும் ஒவ்வொருவராகவும் இறக்கச் செய்துகொண்டு வந்திருக்கின்றார் என்பதில்தான் Pacoவின் நுட்பமான செயற்திறன் விளங்கும்.

மெட்றிட், பாரிஸ் என மாறி மாறி கதைக்களங்கள் விரிந்தாலும், சிக்கலான அரசியல் கதையை, பார்ப்பவர்க்கு கதையின் பின்னணி அவ்வளவு தெரியாவிட்டாலும், இவ்வளவு சுவாரசியமாக ஒரு நெறியாளரால் ( Alberto Rodriguez ) தரமுடியுமா என்பது வியப்பாயிருந்தது. பெரும் ஆபத்தான விடயத்தைச் செய்துகொண்டு, சிறு சறுக்கல் கூட அவரை அதலபாதாளத்திற்குக் கொண்டு செல்லும் என்ற பதற்றமிருந்தாலும், அதை வெளிக்காட்டாது மிகுந்த அமைதியாக எல்லா நகர்வுகளையும் செய்கின்ற Pacoவாக அற்புதமாக நடித்திருக்கின்றார் Eduard Fernandez. ஒருகாலத்தில் ஸ்பெயினில் நடந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது இந்தப்படம் என்கின்றபோது இப்படம் இன்னும் சுவாரசியமானதாக மாறியும் விடுகின்றது.

# வலி சுமந்த மனிதர் கதை

சி.விமலன்




ஈழப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னால் அது குறித்து வெளிவந்த படைப்புக்களை புலிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் வகைப்படுத்தியதால் ஈழத்து இலக்கியச் சூழலே விவாதக் களமாகி இருந்தது. ஈழப்போராட்டத்தில் ஆதரவு நிலைப்பாடு கொண்டவர்களையும் முள்ளிவாய்க்காலில் அனுபவித்த சொல்லொணாத் துயரங்கள் எதிர்மறைச் சிந்தனைகளை விதைப்பதற்கான சூழலையும் உருவாக்கி இருந்தது. இதனுள் போராளிகள் மட்டுமல்லாது படைப்பாளிகளும் அடங்கி இருந்தனர். எனவே அது அவர்களது படைப்புகளிலும் வெளிப்படவே செய்தது. ஏற்கனவே தமிழ்த்தேசியத்திற்கு எதிரான மனநிலையில் இருந்தவர்கள் அதனைப் பொதுமைப்படுத்தி தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் முனைந்தனர்.

ஆனாலும் தாம் வரித்துக்கொண்ட கருத்து நிலை சார்ந்து அங்கு நடந்த சம்பவங்களை காய்தல் உவத்தலின்றி நேர்மையாகப் பதிவுசெய்த எழுத்தாளர்களும் ஈழத்தில் இருக்கின்றார்கள். அந்தவகையில் இறுதியுத்தத்தின் நேரடிச் சாட்சியமாய் விளங்குகின்றது ஆதிலட்சுமி சிவகுமார் எழுதிய 'புள்ளிகள் கரைந்த பொழுது' நாவல்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் வசித்துவரும் செல்வராசு குடும்பத்தை பிரதான பாத்திரமாகக் கொண்டு பல்வேறு துணைப்பாத்திரங்களின் ஊடாக நாவல் கிளிநொச்சியில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை நகர்கின்றது.

போராட்டத்தின் மீது அதீத நம்பிக்கை வைத்த மக்கள் அது பின்னடைவைச் சந்திக்கும் தருணங்களில் தலைமையின் மீது எத்தகைய விசுவாசத்தையும் தங்களைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையையும் அதற்காக அவர்கள் எத்தகைய துன்பத்தையும் தாங்குவதற்குத் தயாராக இருந்தார்கள் என்பதையும் நாவல் கோடிடுகின்றது.

அத்தோடு குண்டுவீச்சினால் அநியாயமாக மனிதர்கள் இறக்கின்ற பொழுதும் போராட்டம் இறுதி ஆயுதபலம் இருந்தும் ஆளணியின் கையறுநிலையை உணரும்பொழுதும் போராளிகள் மீது பச்சாதாபம் ஏற்படுவதோடு போராட்டத்திற்குத் தங்களாலான பங்களிப்பை வழங்க முடியவில்லையே என்ற

(18 ஆம் பக்கம் பார்க்க)




## வாசகர்களுக்கு வணக்கம்!

இந்த வாரத்தில் இருந்து 'வாசிகை' என்னும் பகுதியை புதிதாக ஆரம்பித்துள்ளோம். இலக்கியத்தின் தர நிர்ணயத்தைத் தீர்மானிப்பதில் விமர்சனத்தின் வகிபாங்கு காத்திரமானதாகும். எனவே கலை, இலக்கியம், திரைப்படம், ஓவியம் மற்றும் சமகால கலை, இலக்கிய நிகழ்வுகள் என்பவற்றின் விமர்சனப் பார்வையாக இப்பக்கத்தை வெளிக்கொணர உத்தேசித்துள்ளோம். படைப்பாளிகள் பக்கவரையறையைக் கருத்திற்கொண்டு 300 சொற்களுக்குள் உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், **புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும். நூல் மதிப்புரைக்கு நூலின் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

# என் குரல் கேட்டால் ஏனென்று கேளுங்கள்



கதைக்குள்
மழை பொழிய ஆரம்பித்தது
மழை
கதைக்குள் கிடந்த
விதையை மண்ணால் மூடியது
மண்
விதையை விருட்சமாக்கியது
விருட்சத்தில்
கதைகள் பெருகின
பின்
கதைகளிருந்து
உதிர்ந்த இலைகள்
வரலாற்றை மறைத்தன
இப்படி
வரலாறு
ஆள்பவரின் குரலானது
அதன் பிறகு
வீழ்த்தப்பட்டவரின்
கதைகள்
மழை இன்றி
எழுதப்படாமல்
அருவமாயின
நான்
இலை மூடிக்கிடக்கும்
அக்கதைக்குள்ளிருந்து
ஒலிக்கிறேன்
கொஞ்சம் விசும்பலை
கொஞ்சம் கோபத்தை
உங்களுக்கு
என்
குரல் கேட்டால்
ஏனென்று கேளுங்கள்...

சண்முகம் சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு மட்டுமல்ல பொறுப்பு நமக்கும்தான்

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம்

**20**




பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் என்னிடம் உண்டு. ஆனால் என்னிடம்தான் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று வருத்தப்பட்டான் ஒருவன் என்னிடம் ஒன்றும் இல்லாவிட்டாலும் எனக்கு நல்ல கண் உண்டு. இறந்த பின் யாராவது பயன் பெறட்டும் என்று சொல்லித் தனது கண்ணைத் தானம் கொடுத்துவிட்டான் இன்னொருவன்.

இறக்கும்வரை பொறுக்கத் தேவை இல்லை. மனம் உண்டானால் இடம் உண்டு எனவே இப்பவே கொடுக்கலாம் என்று தீர்மானித்துத் தனது கிட்னியைத் தானமாகக் கொடுத்தான் இன்னொருவன்.

இந்த மூன்றிலும் இருந்து வேறுபட்ட ஒரு மனிதனை நான் இன்று சந்தித்துக் கொண்டேன். தினமும் தனது உழைப்பைத் தானமாகக் கொடுத்திருக்கின்ற அவனை மனிதன் என்பதிலும்விட மாமனிதன் என்பேன் நான்.

காலை 7 மணி. கொக்குவில் இந்துக் கல்லூரி முன்றிலில், மெல்ல மெல்ல சன நெரிசல் அதிகரித்துக் கொள்கிறது. பல மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், கார்கள், பஸ்கள், துவிச்சக்கர வண்டிகள் என வாகன நெரிசலுக்கூடாக பாடசாலை மாணவர்கள் வந்து இறங்கியவண்ணம் இருக்கின்றனர். திடீரென ஒரு வெள்ளை மோட்டார் சைக்கிளில் ஒருவர் பாடசாலை சிறுவர்களை ஏற்றிக் கொண்டு வந்து இறங்குகிறார். தான் கூட்டிக் கொண்டு வந்த சிறுவர்களைத் தெருவைக் கடக்க உதவுவதோடு அவர் பணி ஆரம்பமாகிறது.

அங்கு காணப்பட்ட மஞ்சள் கோட்டில் நின்றவாறு ஒரு போக்குவரத்துப் பொலிஸ்காரரைப் போலச் செயற்படுகிறார். அவரிக் சைகைகளுக்குக் கட்டுப்பட்டு வாகனங்களை நிறுத்தி பாடசாலைச் சிறுவர்கள் வீதியைக் கடந்து செல்ல உதவுகிறார்கள் மக்கள். எல்லாப் பக்கங்களும் சுழன்று சுழன்று அவர் பணியாற்றுவதைப் பார்த்தால் நீண்டகாலம் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவிலே பணியாற்றியவர்போல தெரிந்தது. கழுத்திலே நீண்டபட்டி ஒன்றில் சிவப்புக் கலர் விசில் ஒன்று தொங்குகிறது. இடையிடையே அங்கு திடீர் திடீர் என்று ஏற்படும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த விசிலை எடுத்து ஊதுகிறார் அவர். தலையில் ஹெல்மட், நீண்ட கைச்சட்டையை மடித்துக் காற்சட்டைக்குள் விட்டு மிகவும் நேர்த்தியாக உடுத்த உடுப்பு. அவர் ஓர் ஒழுக்க நெறியோடு வாழ்வது தெரிகிறது. அதைவிட அவர் கொண்ட சமூகப் பொறுப்பும் அவர் பற்றி ஆயிரம் பேசுகிறது.

சிறிது நேரத்தின் பின்னர், காலை ஏழரை மணி இருக்கும் பாடசாலைக் கதவுகள் மூடப் படுகின்றன. வாகன நெரிசலும் குறைந்து போக. அவர் தன் நெற்றியில்படர்ந்த வியர்வைத் துளிகளைப் பெருவிரலால் வழித்துக் கொண்டு தெருக்கரைக்கு வருகிறார். அவரிடம் ஏதேதோ பேசவேண்டும் போல இருக்கிறது. இத்தனை ஆயிரம்பேர் வந்து போகும் இடத்தில் இவருக்கு மட்டும் என்னென்று இந்த யோசனை ஏற்பட்டது? இவருக்கு மட்டும் ஏன் இந்தக் அக்கறை? ஒருவேளை இவரது பிள்ளைகளும் அங்கு படிக்கலாம். இல்லாவிட்டால் பழைய மாணவரோ? சிலவேளைகளில் அதிபரிடம் ஏதாவது உதவி கிடைக்கிறதோ? அதுதான் இவருக்கு இல்லை.... இல்லை... இவருக்குச் சில வேளைகளில் மேல் வீடு பிழையாக இருக்கலாம் என்ற வழமையான யாழ்ப்பாணத்துச் சிந்தனைகள் என்னுள் வந்து போகின்றன.

மெல்ல அவரிடம் கேட்டேன். அவர் பெயர் வடிவேலு விஜயரட்ணம். தினமும் காலையிலே கூலிக்காகச் சிறுவர்களைப் பாடசாலைக்கு ஏற்றி இறக்குகிறார். பின்னர் கிணறு இறைப்பதுதான் அவரது நிரந்தர தொழில். அதுவும் மாரி காலத்தில் தொழில் அவ்வளவு வராது. மீறி பூனை, நாய் ஏதாவது கிணற்றுக்குள் தவறி விழுந்தால்தான் இறைப்பு உண்டு என்று சொல்கிறார் அவர்.

அவரிடம் சமூகம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயம் ஆயிரமாயிரம் உண்டு என்பது எனது கருத்து. அவர் படித்ததற்கும், அவர் நித்தமும் செய்கின்ற தொழிலுக்கும் அவர் ஏற்றிருக்கின்ற சமூகத் தொண்டிற்குமிடையே தொடர்பை நான் காணவில்லை. ஆனால் அவரிடம் சமூகத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற மனமும், ஆர்வமும் மட்டும் அதிகம் உண்டு என்பது தெரிகிறது.


எம்மிடையே வடிவேலு விஜயரட்ணம் போன்ற மனிதர்கள் பலர் இலைமறை காயாக இருக்கின்றமை தெரிகிறது. இத்துடன் அவர் போன்ற மனிதர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடம் உண்டு. எமது சமூகத்தில் இருப்பவர் பலருக்கு நேரம் இல்லை என்ற ஒரு வார்த்தையோடு வாழ்வு நகர்ந்து கொள்கிறது. எதற்கெடுத்தாலும் அதையே சொல்லித் தொண்டுகளையும், பொதுப்பணிகளையும் தட்டிக் கழித்துவரும் நம்மவரிடையே மானுடம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு வடிவேலு விஜயரட்ணம் ஒரு முன்னுதாரணமாகலாம்.

வன்மத்தின் நடுவே வாழவேண்டிய சூழலுக்குள் நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம். சமூகத்தில் அறம் தொலைந்து போய்க்கொண்டிருப்பதற்கு இது ஒரு உதாரணமாகின்றது. வன்மத்தைத் தொலைத்து அறம் மேலோங்க வேண்டும் எனில் மேற்சொன்ன வடிவேலு விஜயரட்ணம் போன்ற அறச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள மனிதர்களை இனம் கண்டு ஊக்குவிக்க வேண்டியது எமது கடமை. வடிவேலு விஜயரட்ணம் மேற்கு நாடுகளில் இருப்பாரேயானால் அங்குள்ள நடைமுறையில் அவர் ஒரு உயர் பதவியை நோக்கி உயர்த்தப்பட்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ரோகண விஜயவீர
மையமாகக் கொண்டு
தி புரோஸன் பயர்'.
டிகர் கமல் ஹத்தர
படம் சிறந்த படமாகத்
19 ஒஸ்கார் விருதுக்கு
ரைக்கப்பட்டுள்ளது.

மும்பையில் தனது வணிக வளாகத்தின் அருகே அனுமதியின்றி கட்டடம் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார் பிரியங்கா சோப்ரா.

இப்போது இந்தக் கட்டடத்தை மாநகர அதிகாரிகள் இடிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளனர். விதியை மீறியமைக்காக அபராதமும் பிரியங்காவுக்கு விதித்துள்ளனர்.

த்ரிஷா சாகச விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டி வருபவர். அண்மையில் கனடா சென்ற அவர் ரொறன்ரோவின் 1,168 அடி உயர கட்டடத்தில் அந்தரத்தில் தொங்கி அசத்தியுள்ளார்.

தா நாக சைதன்யாவை
ம் செய்தது பழைய
ஆனால் அவரது
ருவர் இப்போது
த ஐ லவ் யூ
க்கிறார்.
தாவின் ருவிற்றர்
ல் 'இதுவரை
முறைக்கு
ங்களைப்பற்றி
டுள்ளேன். ஆனால்
ற கூட நீங்கள் பதில்
தில்லை. ஆனால்
மேல் உள்ள காதல்
ரைக்கும் 0001 ஒரு
குறைந்ததில்லை.
' என்று
டுள்ளார்.
து பதிவுக்கு "நன்றி"
ட்டும் சமந்தா
டுள்ளார்.



'அவன் இவன்' படத்தில் ஆர்யா ஜோடியாக நடித்தவர் மதுஷாலினி. பல படங்களில் தொடர்ந்து நடித்தவருக்கு தற்போது வாய்ப்புகள் இல்லை.

இந்நிலையில் தனது சமூகவலைத்தளப் பக்கத்தில் மேலாடை இல்லாத படத்தை மது ஷாலினி பதிவிட்டுள்ளார். ஆனால் இதை நீக்குமாறு பதிவு செய்துள்ளனர்.

ாடலுக்குத்
யாவை
திவிட்டார்
தை அவரின்
ருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தை மாற்றுங்கள்



நாளைய தினம் (15.07.2018) உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் இறுதிப்போட்டியும் நடைபெறவுள்ளமை போட்டியை ஒளிபரப்பும் நிறுவனங்களுக்கும் ரசிகர்களுக்கும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் இங்கிலாந்து நேரப்படி பிற்பகல் இரண்டு மணிக்கு விம்பிள்டன் தொடரின் ஆடவர் பிரிவு இறுதிப்போட்டியும் உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி இங்கிலாந்து நேரப்படி மாலை நான்கு மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது. இவ்விரண்டு இறுதிப்போட்டிகளும் ஆரம்பமாகும் நேரத்திற்கிடையில் இரண்டு மணிநேர வித்தியாசங்கள் இருந்தாலும் போட்டி ஒளிபரப்பை இது பாதிக்கும் எனக் கருதப்படுகின்றது.

இதற்குக் காரணம் 2002 ஆம் ஆண்டில் இருந்து விம்பிள்டனில் நடைபெறும் ஆடவர் இறுதிப்போட்டியின் சராசரரி நேரம் 2 மணித்தியாலங்களும் 53 நிமிடங்களும் ஆகும். எனவே அதனை வைத்துப்பார்க்கும் பொழுது ரென்னிஸ் இறுதிப்போட்டியைப் பார்வையிடும் ரசிகர் ஒருவர் உலகக் கிண்ண இறுதிப்போட்டியின் முதற்பாதி ஆட்டத்தை தவறவிடுவதற்கான வாய்ப்புள்ளது.

இது குறித்து All England Lawn Tennis and Croquet Club இன் ஊடகத்துறை பணிப்பாளரான மிக் டெஸ்மண்ட் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி இங்கிலாந்து நேரப்படி மாலை 4 மணிக்கு ஆரம்பமாக இருப்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது. ஏனென்றால் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நான்கு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறுவது. ஆனால் விம்பிள்டன் தொடர் 140 ஆண்டுகளாக வருடந்தோறும் நடைபெற்று வருவது.

இத்தொடரின் ஆடவர் இறுதிப்போட்டி எப்போதுமே இங்கிலாந்து நேரப்படி பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறுவது தான் வழமையானது. ரஷ்ய நேரப்படி இறுதிப்போட்டியை மாலை 6மணிக்கு நடத்துவதென்ற முடிவு 2015 டிசெம்பர் 3 ஆம் திகதி எடுக்கப்பட்டதாகும். அப்போது இது குறித்து ஒருவரும் சிந்திக்கவில்லை. ஆனால் தற்போதுதான் அதனை உணர்ந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே போட்டியைப் பார்வையிடும் ரசிகர்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் போட்டியை ஒளிபரப்புச் செய்யும் நிறுவனங்களின் வணிக ரீதியான அனுகூலங்களைக் கருத்திற்கொண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி ஆரம்பமாகும் நேரத்தை பிபா மாற்ற வேண்டுமென விம்பிள்டன் குழுமத்தினர் எதிர்பார்க்கின்றனர். ஆனாலும் இந்தப்பத்தி எழுதும் வரை அவர்களுக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

# பதவி நீடிப்பு




உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடையும் தறுவாயில் தோல்விகளுக்குப் பொறுப்பேற்று அணியின் பயிற்சியாளர்கள் தாமாகவே விலகிக்கொள்வதும் அந்தந்த நாட்டு உதைபந்தாட்டச் சம்மேளனங்களால் அதிரடியாக நீக்கப்படுவதும் வழமையான ஒன்றுதான். அந்தவகையில் ஜப்பான் நாட்டு பயிற்சியாளரான அகிரா நிஷினோ பதவியில் இருந்து தாமாகவே விலகியுள்ளார்.

அந்த வகையில் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜோச்சிம் லோ 2006, 2010 உலகக் கிண்ணப் போட்டிகளில் அரையிறுதிப்போட்டி வரை அணியைக் கொண்டு சென்றிருந் தார். அதுபோலவே யூரோ கிண்ணப் போட்டிகளிலும் ஜேர்மனி 2008 தொட ரில் இரண்டாமிடத்தைப் பிடித்ததோடு 2012, 2016 தொடர்களில் அரையிறுதிப் போட்டிக்கும் தெரிவாகி இருந்தது.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு உலகக் கிண்ணப்போட்டிகள் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி வரை அவரது பயிற்சியாளர் ஒப்பந்தத்தை ஜேர்மனிய உதைந்தாட்டச் சம்மேளனம் நீடித்திருந்தது.

இருப்பினும் 1938 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப் பின்னர் இம்முறைதான் முதற்சுற்றுப் போட்டியுடன் நடப்புச் சம்பியனான ஜேர்மனி வெளியேறியதனால் அணியின் பயிற்சியாளரான ஜோச்சிம் லோ அதிரடியாக நீக்கப்படுவார் என்ற கருத்தே பலரிடமும் இருந்தது. ஆனால் அவர் தொடர்ந்தும் 2022 வரை பயிற்சியாளராக நீடிப்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என ஜேர்மனிய உதைந்தாட்டச் சம்மேளனம் தற்போது அறிவித்து இந்தப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

# இரண்டாம் பாகம்




இந்திய சினிமாவில் முன்னர் வெளிவந்த திரைப்படங்களின் இரண்டாம் பாகங்கள் வெளிவருவது தற்போது ஒரு டிரெண்டாகவே மாறியுள்ளது. அந்த வகையில் டோனியின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம் தான் Ms Dhoni : The Untold story. 2016ஆம் ஆண்டு வெளிவந்த இந்தத் திரைப்படத்தில் புகையிரத நிலையத்தில் ரிக்கெற் பரிசோதகராக வேலை செய்யும் டோனி இந்திய அணியில் இடம் பிடித்து 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்தியா வெல்வது வரை சித்திரிக்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில் இரண்டாவது பாகத்தில் 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா சம்பியனானது, டெஸ்ட் போட்டிகளில் இருந்து டோனி ஓய்வு பெற்றது, 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதி வரை இந்தியா முன்னேறியது, மகள் ஷிபா பிறந்தது, ஐ.பி.எல் பயணம், 2011ஆம் ஆண்டு டோனி இந்திய இராணுவத்தின் லெப்ரினன் கேணல் பதவி பெற்றது போன்ற பல விடயங்கள் படமாக்கப்படவுள்ளன.

இந்தப்படத்தை யார் இயக்கவுள்ளார் என்ற விடயம் இதுவரை தெரியாதபோதிலும் பொலிவூட் படத்தயாரிப்பாளரான றொனி ஸ்குருவாலா அவர்கள் இந்தப்படத்தை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் எனவும் முதற்படத்தில் டோனியாக நடித்த சுசாந்சிங் ராஜ்புட்டே இந்த இரண்டாவது பாகத்திலும் டோனியாக நடிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இதுகுறித்த பேச்சுவார்த்தைகள் தற்போது பொலிவூட் வட்டாரத்தில் நடைபெறுவதோடு அடுத்தாண்டு இத்திரைப்படத்தை வெளிக்கொணர்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# தெரிவு சரிதானா?

சில வாரங்களுக்கு முன்னர் ஈஎஸ்பிஎன் கிரிக்இன்போ இணையத்தளம் கடந்த 25 வருடங்களில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய வீரர்களை அடிப்படையாகக் கொண்டு கனவு அணி ஒன்றை வெளியிட்டிருந்தது. அணியின் விபரம் : மத்தியூ ஹெய்டன், விரேந்திர ஷேவாக், றிக்கி பொன்ரிங், சச்சின் டெண்டுல்கர், பிறைன் லாறா, ஜக் கலிஸ், அடம் கில்கிறிஸ்ற், வசீம் அக்ரம், மக்கிராத், ஷேன் வோர்ண், முரளிதரன்.

இதில் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் நான்காவது இடத்தில் இருக்கும் இந்திய அணியின் தடுப்புச்சுவரான ராகுல் டிராவிட்டின் பெயர் விடுபட்டமை சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. வீரர்களது தனித்துவமான சாதனைகளைக் கருத்திற்கொண்டே இப்பட்டியல் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்தவகையில் டெண்டுல்கர் நான்காவது வீரராகக் களமிறங்கி 13,492 ஓட்டங்களைக் குவித்தாலும் அதில் வெற்றிக்கான அவரின் பங்களிப்பை நோக்குகையில் தெரிவு குறித்துக் கேள்விகள் எழவே செய்யும்.

இந்நிலையில் முன்னாள் மிகச்சிறந்த வீரர்களுக்கு Hall of Fame கௌரவம் வழங்கி வரும் ஐ.சி.சி கடந்தவாரம் அந்தப்பட்டியலில் ராகுல் டிராவிட்டையும் றிக்கி பொன்ரிங்கையும் இணைத்துள்ளது. இந்தக் கௌரவத்தை இதற்கு முன்னதாக இந்திய அணி சார்பில் சுனில் கவாஸ்கர், கபில்தேவ், பிஷன்சிங் பேடி, அனில் கும்ளே ஆகியோரும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ பட்டியலில் ராகுல் ராவிட்டின் பெயர் விடுபட்டதனால் வருத்தமடைந்த ரசிகர்களுக்கு இந்தக் கௌரவம் ஆறுதல் அளிக்கும் எனலாம்.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 14.07.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org